# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 494 பிலவ வருடம், பங்குனி மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(05.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 03 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## அரசிலிருந்து விலகியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

### நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியதுடன், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவும் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று...

02 பக்கம்

## புதிய வாளியில் பழைய குளியல்!

### புதிய அமைச்சர்கள் நியமனத்தை கலாய்த்தார் கம்மன்பில

புதிய வாளியில் பழைய குளியலை அரசாங்கம் மேற்கொள்வதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்காலிக அமைச்சரவைக்கு சில அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர் தனது ட்விட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

எங்களது கோரிக்கையானது அத்தியாவசிய சேவைகளை...

02 பக்கம்

# சபையில் இன்று பலப்பரீட்சை!

## அரசின் நாடாளுமன்ற பெரும்பான்மை இழக்கப்படும் அபாயம்

(யோ.தர்மராஜ்)

நாடு பூராகவும் அரசுக்கு எதிராக மக்கள் கடும் எதிர்ப்புகளை தெரிவித்து வரும் நிலையில் இன்று (05) கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வில் சாதாரண பெரும்பான்மையை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதால் இன்றைய சபை அமர்வு அரசாங்கத்திற்கு பலப்பரீட்சையாக அமையும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாளுக்கு நாள் அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் அதிகரித்துவருவதால் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களும்...

02 பக்கம்

# அமைச்சர்கள் நால்வர் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவியேற்பு

அலி சப்ரி - நிதி | தினேஷ் - கல்வி | ஜீ.எல். - வெளிவிவகாரம் | ஜோன்ஸ்டன் - நெடுஞ்சாலை

(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்த அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகியதையடுத்து புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நால்வர் நேற்று (04) பதவி ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி, புதிய நிதி அமைச்சராக அலி சப்ரியும் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்தனவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும்,...



02 பக்கம்



# தேசிய நெருக்கடி தீர ஒன்றிணைவோம்: கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார் கோட்டா!

(யோ. தர்மராஜ்)

நாட்டில் தற்போது நிலவும் தேசிய நெருக்கடிக்குத் தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்குத் தீர்வு காணும் நோக்கில் அனைத்து கட்சிகளையும் இணைத்து இடைக்கால...

02 பக்கம்

# அரசுக்கு எதிராக நாடுபூராகவும் அணிதிரண்ட மக்கள் படை

### அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.பிக்களின் வீடுகள், அலுவலகங்கள் முற்றுகை

(நா.தினுஷா)

நெருக்கடி நிலைமையின் காரணமாக நாடுபூராகவும் நேற்று (04) மக்கள் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்...

02 பக்கம்




# ஜனாதிபதியின் அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரிப்பு

(யோ.தர்மராஜ்)

நாட்டின் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வுகாண அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன.

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் இவ்வாறு ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்துள்ளன.

02 பக்கம்

# மத்திய வங்கியின் ஆளுநர் இராஜினாமா

## புதிய ஆளுநராக நந்தலால் நியமிக்கப்படலாம்



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் இராஜினாமா செய்துள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றை இட்டு அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதன்போது தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் தாம் கையளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக நேற்று முன்தினம்...

02 பக்கம்

# பொருளாதார நெருக்கடியால் ஆடைத் தொழில்துறை பாதிப்பு

### கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் எச்சரிக்கை

இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் முன்னணி அமைப்பான கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF), தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி காரணமாக...

02 பக்கம்




இடைக்கால அரசாங்கத்தில் வெளிநாட்டமைச்சராக பதவியேற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரிடம் கேட்கப்பட்டதாம். ஆளைவிட்டால் போதும் என்றாராம் ரணில். பிரதமர் பதவியை ரணில் கண்வைத்தாலும் அதை கொடுக்கும் இஷ்டமில்லையாம் அரசுக்கு.

# திறைசேரியின் செயலாளராக தம்மிக்க நியமிக்கப்படலாம்?



புதிய நிதியமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்பட்டதையடுத்து நிதியமைச்சின் செயலாளராக பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்படலாமென அறியமுடிகின்றது.

நிதியமைச்சின் செயற்பாடுகளை தனித்துவமாக முன்னெடுக்க...

02 பக்கம்

# இராஜாங்க அமைச்சர்கள் நேற்று பதவி இராஜினாமா

(யோ.தர்மராஜ்)

மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான எதிர்ப்புகள் வலுக்கின்ற நிலையில் அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா செய்துள்ள போது, இரு இராஜாங்க அமைச்சர்களும் தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

அதன்படி, ஆரம்ப சுகாதார சேவைகள்,...

02 பக்கம்

# நகரங்கள் பலவற்றில் மக்கள் பேரணி

### கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸ், இராணுவம் திண்டாட்டம்

(நா.தினுஷா)

நெருக்கடிக்குள்ளிருந்து நாட்டை பாதுகாப்பதற்காகவும் தமது உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் நாடளாவிய ரீதியில் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளனர்.

நேற்று (04) காலையிலிருந்து மாலைவரை ஒவ்வொரு மாவட்டங்களிலும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் சுயாதீனமாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். நாட்டில் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் அமுல்படுத்தப்பட்ட...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



அரசுக்கு எதிரா ஆர்ப்பாட்டம் நடக்காத நகரங்கள லேசா பட்டியலிடலாம் பாருங்கோ...

# இலங்கை நெருக்கடி குறித்து மோடி - ஜெய்ஷங்கர் ஆலோசனை

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள், உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இலங்கை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வாரம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து பொருளாதாரப் பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை...

02 பக்கம்

# பேராசிரியர் சந்திரசேகரம் இயற்கை எய்தினார்




(நமது நிருபர்)

இலங்கை கல்விச் சமூகத்தின் மிகப்பெரும் அடையாளமாகத் திகழ்ந்த மூத்த கல்விமான் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தனது 77ஆவது வயதில் திடீர் சுகயீனம் காரணமாக நேற்று (04) காலமானார்.

1944ஆம் ஆண்டு பதுளையில் பிறந்தசந்திரசேகரம் ஆரம்பக்...

02 பக்கம்

## சபையில் இன்று...

பதவி விலகுகின்றதுடன், அரசின் மீதுள்ள அதிருப்தியால் சிலர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகவும் செயற்பட தீர்மானித்துள்ளதால் ஏற்கனவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்துள்ள அரசாங்கம் சாதாரண பெரும்பான்மையையும் இழக்கும் அபாயத்திலுள்ளது.

குறிப்பாக, பங்காளிக் கட்சிகளின் வெளியேற்றம், இராஜாங்க அமைச்சர்களின் இராஜினாமா, ஆளுங்கட்சியினரின் அதிருப்தி ஆகியவற்றுக்கு மத்தியில் இன்று கூடவுள்ள சபை அமர்வில் அரசாங்கம் தன்னுடைய சாதாரண பெரும்பான்மையை இழக்க நேரிடலாம் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸாவினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய பட்டியல் ஆசனங்கள் உள்ளடங்கலாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களை வென்றது. தேர்தலில் தனித்து களமிறங்கிய டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், ரத்ன தேரர் போட்டியிட்ட எமது மக்கள் சக்தி, பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியன தேர்தலின் பின்னர் அரசுக்கு ஆதரவளித்தன.

யாழ். மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவளித்ததால் 151 ஆசனங்கள் (அதாவது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியமைத்தது.

இதற்கு மேலதிகமாக புத்தளம் மாவட்டத்தில் தனித்து போட்டியிட்ட முஸ்லிம் தேசிய கூட்டணியும் (ஒரு ஆசனம்) அரசுக்கு நேசக்கரம் நீட்டிவருகின்றது. அதேபோல எதிரணி எனக் கூறிக்கொண்டாலும் ரிஷாட் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவும் வாக்கெடுப்புகளின்போது அரசுக்கு ஆதரவு வழங்கிவருகின்றன. (கட்சித் தலைவர்களை தவிர) டயானா, அரவிந்தகுமார் ஆகியோரும் அரசு பக்கம் உள்ளனர். அந்தவகையில் நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக 160 பேர் செயற்பட்டுவந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதம் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதால் அரசின் மூன்றிலிரண்டு பலத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – 14, தேசிய சுதந்திர முன்னணி – 06, ஜனநாயக இடதுசாரி முன்னணி – 02, பிவிதுரு ஹெல உறுமய – 1, கம்யூனிஸ்ட் கட்சி – 01, லங்கா சமசமாஜக்கட்சி - 01 (தேசியப்பட்டியல்), தேசிய காங்கிரஸ் -01, 'யுதுகம' – 01 மற்றும் எமது மக்கள் சக்தி - 01 என தற்போது அரசுக்கு எதிராக 28 பேர் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

இதனால், எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள் இல்லாது அரசின் 153 என்ற எண்ணிக்கையில் இருந்து 28 பேரை கழித்தால், தற்போது அரச பக்கம் 125 உறுப்பினர்களே இருக்கின்றனர். சிலவேளை, அரசு முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவை பெற்றால்கூட அந்த எண்ணிக்கை 132 ஆக உயரக்கூடும். இதனால், அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்துள்ளதாக கருதப்படுகின்றன. இந்த நிலையில், தற்போது பங்காளிகளின் வெளியேற்றம், இராஜாங்க அமைச்சர்களின் இராஜினாமா, ஆளுங்கட்சியினரின் அதிருப்தி ஆகியவற்றால் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு தற்போது லங்கா பொதுஜன பெரமுன -117, ஈ.பி.டி.பி. – 02, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி – 01, அரவிந்தகுமார் - 01, டயானா - 01 என 122 ஆசனங்களே உள்ளன. இதில், சுசில் பிரேமஜயந்த, விஜயதாச ராஜபக்ஷ, சந்திம வீரக்கொடி, விதுர விக்ரமநாயக்க, பிரேமநாத் சீ தொலவத்த, நிமல் லான்சா மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோர் அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக்கொள்ள தயார் நிலையில் இருக்கின்றனர்.

இதனால், 122 ஆசனங்களிலிருந்து 7 பேரை கழிக்கும் போது ஆளுங்கட்சி வசம் தற்போது 115 ஆசனங்களே உள்ளன. இந்நிலையில் அரசிலிருந்து வெளியேற தயார் என்ற அறிவிப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் விடுத்துள்ளதால் 115 இலிருந்து 2 ஐ கழிக்கும்போது 113 ஆசனமே இருக்கும். ஒருவேளை, டக்ளஸ் தேவானந்தா (இரு ஆசனம்) மற்றும் பிள்ளையான் ஆகியோர் அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால் 113 இலிருந்து 110 ஆக குறைந்து நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சாதாரண பெரும்பான்மையை இழந்துவிடும். சிலவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (04), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (02), அலி சப்ரி (புத்தளம்) (01) ஆகியோரின் ஆதரவை பெற்றால் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் எதிரணி உறுப்பினர்களையும் பெற்றால் அரசாங்கத்தால் ஆட்சியை தக்கவைக்க முடியும்.

எனினும், முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச உள்ளிட்ட பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்தின் சாதாரண பெரும்பான்மையை இழக்க செய்வோம் என பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் சுயாதீனமாக செயற்பட உள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா நேற்று (04) தெரிவித்துள்ளார். இதனால், இன்று (05) கூடவுள்ள சபை அமர்வானது அரசாங்கத்திற்கு பலபரீட்சையாக இருக்கும் என கூறப்படுகின்றன.

இது குறித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவிக்கையில்,

இந்த அழுத்தத்தை புரிந்து கொண்டு அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று கூறிய அவர், இந்த தருணத்தில் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நாடாளுமன்றத்தில் அரசின் பெரும்பான்மையை இழக்கச் செய்வோமென முன்னாள் அமைச்சர் நேற்று மாலை தெரிவித்திருந்தார்.

நேற்று மாலை பிரதமர் தலைமையில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் 138 எம்.பிக்கள் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் இன்று நாடாளுமன்றம் வருவார்களா என்பது தெரியவில்லை.

இன்று நாடாளுமன்றத்தில் ஏதேனும் ஒரு கட்சி 113 என்ற சாதாரண பெரும்பான்மையை நிருபிக்குமாக இருந்தால் ஆட்சியை ஒப்படைக்கத் தயாரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று மாலை நடந்த ஆளுந்தரப்பு எம்.பிக்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## அரசிலிருந்து...

கூடிய மத்தியக் குழுவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் லசந்த அலகியவன்ன, பியங்கர ஜயரத்ன, துமிந்த திசாநாயக்க ஆகியோர் இராஜாங்க அமைச்சு பொறுப்புகளில் இருந்து விலகவும் தீர்மானித்துள்ளனர்.

## இலங்கை நெருக்கடி...

திங்கட்கிழமை சந்தித்த ஜெய்ஷங்கர், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் பாகிஸ்தானின் அரசியல் சூழல் குறித்தும் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் தற்போது நிலவிவரும் இலங்கை பிரச்சினை குறித்து விரிவாக பிரதமர் நரேந்திர மோடியிடம் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் எடுத்துக் கூறினார்.

## நகரங்கள் பலவற்றில்...

ஊடரங்கு சட்டம் நேற்றுக்காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டிருந்த நிலையில், ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டது முதல் நேற்று மாலை நாட்டின் ஒவ்வொரு பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பத்தரமுல்லை, கொழும்பு, கொழும்பு நகர மண்டபப் பகுதி, லிப்டன் சுற்று வட்டம், யாழ்ப்பாணம், அவிசாவளை, கேகாலை, பொகவந்தலாவை, காலி, திருகோணமலை, எஹலியகொடை, கண்டி, தங்காலை, எம்பிலிப்பிட்டிய, கந்தளாய், மொரட்டுவை, களுத்துறை, மீரிகம, திஸ்ஸமஹாராம, ஹங்வெல்லை, பதுளை, தெஹியோவிட்ட, வெலிமடை, பலப்பிட்டிய, புலத்சிங்கள, புத்தளம், மஹரகமை, மாத்தறை, ஏறாவூர், நுவரெலியா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்கள் வைத்திய சாலையின் முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், தாய்மார், நோயாளர்கள் என வேறுபாடின்றி அனைவரும் வீதிக்கு இறங்கி போராடியதை நேற்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே காரணம் என்றும் ஆட்சியை முன்னெடுக்க முடியாவிட்டால் ஆட்சி செய்யக்கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு இந்த அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதே நேற்றைய ஆர்ப்பாட்டங்களில் மக்களின் பிரதான கோரிக்கைகளாக அமைந்திருந்தன.

இந்நிலையில், பிரதமரின் கார்ட்டன் இல்லத்துக்கு அருகில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டிருந்ததுடன், ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸாரினால் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

"இதுவா தேசிய பாதுகாப்பு?, மக்கள் அமைதி காத்தது போதும் தற்போதாவது மாற்றத்தை ஏற்படுத்துவோம், கொள்கையில்லாத அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்புவோம், சரியாக கடமையாற்ற முடியாத வீரர் இந்த நாட்டின் இருள், மக்களுக்கு அதிகாரம் வேண்டும்" என அரசாங்கத்துக்கு எதிராக எழுதப்பட்ட பல்வேறு பதாதைகளை ஏந்தியவண்ணமும் கோஷங்களை எழுப்பிய வண்ணமும் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

மக்களின் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில், கொழும்பு புதுக்கடை நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகில் சட்டத்தரணிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில், "அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பினால் போதாது, நம்மிடமிருந்து திருடிய பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும், அவர்களின் பிள்ளைகள் சுகத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால், எமது பிள்ளைகளோ தினந்தோறும் கஷ்டத்தின் மத்தியிலே வாழ்கிறார்கள், ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்" என்று சட்டத்தரணிகள் குரல் எழுப்பியிருந்தனர்.

## ஜனாதிபதியின் அழைப்பை...

இதேவேளை, ஊழல் மிக்க ராஜபக்ஷ அரசுடன் சேர்ந்து ஆட்சியமைக்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இனியும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது பதவியிலிருந்து விலகுமாறு கோரும்போது அவரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துடன் எந்தவொரு உடன்பாடுகளுக்கோ அல்லது ஆட்சியமைப்பதற்காகவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாராக இல்லை. ஒரு கணமேனும் தாமதிக்காது உடனடியாக அரசாங்கத்தை வெளியேற்றுவதே தற்போதைய முக்கிய நடவடிக்கையாக இருக்கின்றன. அதனை மேற்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றே மக்கள் கூறுகின்றனர். இதற்கு மாற்றீடாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடன் இருப்பதால், ஊழல் மிக்க அரசாங்கத்துடன் டீல் (ஒப்பந்தம்) அரசியல், ஐக்கிய மக்கள் சக்தியால் ஒருபோதும் மேற்கொள்ளப்படமாட்டாது. சில வங்குரோத்தான குழுக்கள் தவறான கருத்துகளை சமூகமயமாக்கி வருகின்றன. எனினும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அடிபணியாது – என தெரிவித்துள்ளார்.

இது குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபயவும் பிரதமர் மஹிந்தவும் தங்களுடைய பதவிகளை தக்கவைத்துக்கொள்ளும்போது அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகும் நாடகமொன்றை அரசாங்கம் அரங்கேற்றியுள்ளது. நேற்று முன்தினம் (03) அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகியவர்கள் நேற்று (04) மீண்டும் அதே அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்கின்றனர்.

இதனையடுத்து, அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து கட்சிகளுக்கும் அழைப்புவிடுப்பதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால், இது அமைச்சு பதவிகளுக்கான பிரச்சினையில்லை. எனவே, இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நிராகரிக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இனியும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது பதவியிலிருந்து விலகுமாறு கோரும்போது அவரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்க முடியாது. ஜனாதிபதியினால் வழங்கப்படும் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்வதை தங்களுடைய கட்சி முற்றாக மறுக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதலில் பதவி விலக வேண்டும். அதன் பிறகு, இந்த நெருக்கடியை நிர்வகிப்பதற்கான அரசாங்கம் அமைப்பது பற்றி விவாதிக்கலாம். அத்தோடு, தேர்தல் நடத்தி, பொதுமக்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கம் ஒன்றையும் நியமிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

## தேசிய நெருக்கடி...

அரசாங்கத்தை அமைப்பது குறித்து பேசப்படும் நிலையில், ஜனாதிபதியினால் நேற்று (04) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் தற்போது நிலவும் தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய நெருக்கடிக்கு பல பொருளாதார மற்றும் உலகளாவிய காரணிகள் காரணமாக இருப்பதாகவும், ஆசியாவின் முன்னணி ஜனநாயக நாடுகளில் ஒன்றாக ஜனநாயகத்தின் கட்டமைப்பிற்குள் அதற்கான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டு மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக தேசிய நலன் கருதி ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எனவே, அமைச்சுப் பதவிகளை ஏற்று தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணைந்து செயற்படுமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

## அமைச்சர்கள் நால்வர்...

நெடுஞ்சாலைகள் அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று (04) நண்பகல் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் தற்போதைய அரசாங்கத்தை கலைத்துவிட்டு புதிய இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன்படி, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து புதிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது குறித்த யோசனையை முன்வைத்தனர்.

இவர்களின் யோசனைக்கு சாதகமான பதிலை வழங்கி ஜனாதிபதி மற்றும் பிரதமர் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது குறித்து நேற்று முன்தினம் இரவு விசேட கலந்துரையாடலை முன்னெடுத்தனர். அதற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகும் பட்சத்தில் அமைச்சரவை தானாக கலைந்துவிடும் என்பதால் அவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்யும் முடிவை எடுத்திருந்தார்.

எனினும், பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டாம் என ஆளுந்தரப்புக்குள் அழுத்தங்கள் அதிகரித்ததுடன், ஏனைய அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். இதனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவிர ஏனைய அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் நேற்றுமுன்தினம் (03) இரவு தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்தனர்.

குறிப்பாக, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் தங்களுடைய அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதாக அறிவித்தனர். இதனையடுத்து, ஏனைய அமைச்சர்களும் தங்களுடைய பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்ததாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இதனையடுத்து, நேற்று (04) காலை ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு இடையில் இடம்பெற்ற விசேட பேச்சுவார்த்தைக்கு பின்னர் அமைச்சரவை முழுமையாக கலைக்கப்பட்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும், இடைக்கால அரசாங்கத்திற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாலும் நாடாளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைச்சர்களை நியமிக்க வேண்டும் என்பதாலும் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக நான்கு அமைச்சர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இன்று (05) நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ளதால் ஆளுந்தரப்பு சபை முதல்வர் மற்றும் ஆளுந்தரப்பு பிரதம கொறடா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, ஏற்கனவே, சபை முதல்வராக இருந்த அமைச்சர் தினேஷ் குணவர்தன மீண்டும் சபை முதல்வராகவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆளுந்தரப்பு பிரதான கொறடாவாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய வாளியில்...

மீளமைப்பதற்கும், நாடாளுமன்ற தேர்தலொன்றுக்கு செல்வதற்குமான இடைக்கால அரசொன்றை நிறுவுவதே.

அடுத்த தலைவர்களை மக்களே தீர்மானிக்க வேண்டும், வேறு யாரும் அல்ல எனவும் அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசுக்கு எதிராக...

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கார்ட்டன் இல்லம் உள்ளிட்ட அமைச்சர்களின் வீடுகள் நேற்று மக்களால் முற்றுகையிடப்பட்டிருந்ததுடன் அந்த பிரதேசங்களில் அமைதியின்மையும் ஏற்பட்டிருந்தது.

பிரதமரின் கார்ட்டன் இல்லத்துக்கு முன்னால் அமைதியின்மை ஏற்பட்டிருந்ததுடன் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் வீட்டுக்கு அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிவில் அமைப்புகளை சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட மக்களின் பங்கேற்புடன் நேற்று (04) தங்காலை பஸ் தரிப்பிடத்தில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தங்காலை பஸ் நிலையத்தில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம், பேரணியாக பிரதமரின் கார்ட்டன் வீடு வரை சென்றதுடன், கார்ட்டன் வீட்டுக்கு முன்பாக பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த வீதிப் பாதுகாப்பு தடையை உடைத்துக்கொண்டு கால்ட்டன் வீட்டுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இரண்டாவது வீதித்தடை வரையும் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தங்காலை நீதிமன்ற சட்டத்தரணிகளும் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில், அந்தப் பிரதேசத்தில் களகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் வீடும் நேற்று (04) மக்களால் முற்றுகையிடப்பட்டது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.அரசாங்கத்துக்கும் முன்னாள் அமைச்சருக்கும் எதிர்ப்பு தெரிவித்து ஒன்றுகூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் "ஜனாதிபதி உடனடியாக வீட்டுக்குச் செல்ல வேண்டும்" போன்ற பல்வேறு எதிர்ப்பு பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக காலி கித்துலபிட்டிய வீதியில் வாகன போக்குவரத்துக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது. இருந்தபோதிலும், முன்னாள் அமைச்சரின் வீட்டு கதவுகள் மூடப்பட்டிருந்ததுடன் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் மொஹான் சில்வா வீட்டுக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தெபரவெவயில் அமைந்துள்ள அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் வீட்டுக்கு கடந்த இரு தினங்களாக கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில், நேற்று பிற்பகல் அவரின் வீடும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களின் வீட்டுக்குச் செல்லவேண்டும் எனக்கோரி, திஸ்ஸமஹாராம பிரதேசத்திலுள்ள இளைஞர்களினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைச்சரின் வீட்டுக்குள் நுழைய முயற்சித்ததால் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் தர்க்கநிலை ஏற்பட்டிருந்தது. தெபரவெவ இரும்பு பாலத்துக்கு அருகில் அமைச்சர் சமர் ராஜபக்ஷவின் வீடு உள்ளிட்ட ஐந்து வீதிகளில் 30 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டடிருந்த நிலையில், அந்த பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஏ–9 வீதி, தம்புள்ளை, யாபாகம பிரதேசத்தில் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோனின் வீடு முற்றுகையிடப்பட்டு, பாரியளவான மக்களின் பங்கேற்புடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் காரியாலயத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நீர்கொழும்பு, தலுபொத்த பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சாவின் வீடும் நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. அந்த பிரதேசத்தில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அந்த பிரதேசங்களில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன், போக்குவரத்து தடையும் ஏற்பட்டிருந்தது.இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஆளுங்கட்சி எம்.பி சஹன் பிரதீப், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் ஆகியோரின் அலுவலகங்களின் முன்பாகவும் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

## மத்திய வங்கியின்...

நள்ளிரவு பிரதமர் மற்றும் ஜனாதிபதி தவிர ஏனைய அமைச்சர்கள் பதவி விலகும் கடிதத்தை பிரதமர் மஹிந்தவிடம் கையளித்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போது மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலும் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நந்தலால் வீரசிங்க புதிய ஆளுநராக நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

## பேராசிரியர்...

கல்வியை பதுளை ஊவா கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் மகாஜனா கல்லூரியிலும் பயின்றார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பையும் இளமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட அவர், ஜப்பானின் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுக்கொண்டார்.

அவர், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

மலையக மக்களின் கல்வி, அபிவிருத்தி குறித்து ஆய்வுகளை அவர் மேற்கொண்டுள்ளதுடன் அதற்கென தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வந்தார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு, பொரளை ரேமண்ட் மலர்ச்சாலையில் இன்று (05) காலை 08 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் என உறவினர்கள் தெரிவித்தனர்.

நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (தொடர்பு: மகன்- ச. தயாளன் 076 7354251

## பொருளாதார நெருக்கடியால்...

தொழில்துறையின் செயற்பாடுகளைத் தொடரும் திறன் குறித்து மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

"எரிபொருள் தட்டுப்பாடு எமது அன்றாட உற்பத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. டீசல் இல்லாததால் மின்வெட்டு நேரங்களில் ஜெனரேட்டர்களை பயன்படுத்த முடியாமல் உள்ளது. இதைத்தவிர, எரிபொருள் பற்றாக்குறை எமது உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்லும் செயற்பாட்டை பாதிக்கிறது மற்றும் எமது ஊழியர்களுக்கான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன." என கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ் தெரிவித்தார்.

கொவிட்-19 கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதில் இருந்து கேள்விகள் நிரம்பியிருந்தாலும், இந்த கேள்விகளை (order )எந்த இடையூறும் இன்றி, குறிப்பாக ஏப்ரல் விடுமுறைக்கு முன்பாக நிறைவேற்றுவது சவாலாக இருப்பதாக JAAF குறிப்பிட்டது. நீண்ட காலமாக நிலவும் மின்வெட்டு மற்றும் டீசல் பற்றாக்குறை போன்ற காரணங்களால் இனி இயங்க முடியாமல் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர்கள் (SME) உட்பட தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டு வருகின்றன.

BOI நடத்தும் ஏற்றுமதி செயலாக்க வலையங்கள் (Export Processing Zones - EPZ) மின்வெட்டுகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால், அது கடைப்பிடிக்கப்படவில்லை. கடந்த 24 மணிநேரத்தில் EPZகளும் நீண்டநேர மின்வெட்டை அனுபவித்து வருகின்றன.

இலங்கையின் ஆடைத்துறையானது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 06 வீத பங்களிப்பதோடு, அனைத்து ஏற்றுமதிகளிலும் 40 வீதப் பங்களிப்பைக் கொண்டுள்ளது. இந்தத் துறையானது 350,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறது. மேலும் 700,000 பேர் அதிக விநியோகச் சங்கிலியின் ஒரு பகுதியாக வாழ்வாதார வாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

"இந்த நெருக்கடி, உடனடியாக தீர்க்கப்படாவிட்டால், முழுத் தொழில் துறையையும் ஆபத்தில் ஆழ்த்திவிடும். இலங்கை எப்பொழுதும் தமது உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிடையே உயர்மட்ட நம்பிக்கையை பேணி வருகின்றது" என லோரன்ஸ் மீண்டும் வலியுறுத்தினார். "எமது கொள்வனவாளர்கள் எங்கள் மீது நம்பிக்கையை இழந்து மற்ற போட்டி சந்தைகளுக்குச் சென்றால், அவர்களை திரும்பப் பெறுவது மிகவும் சவாலானதாக இருக்கும்." எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இராஜாங்க...

தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் இவ்வாறு தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இருவரும் தங்களுடைய பதவி விலகுவது தொடர்பான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை, அரசுக்கு எதிரான எதிர்ப்புகள் வலுக்கும் நிலையில் மேலும் சில இராஜாங்க அமைச்சர்களும் பதவி விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிய முடிந்தது.

## திறைசேரியின்...

வேண்டிய தேவை குறித்து ஜனாதிபதியுடன் ஆலோசித்துள்ள அமைச்சர் அலி சப்ரி, நிதியமைச்சுக்கு பொருத்தமான துறைசார் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படியே தம்மிக்க பெரேரா திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்படலாமென அறிய முடிந்தது.

# மன்னாரில் சகல துறையினருக்கும் தடையின்றி எரிபொருள் விநியோகம்

## அரச அதிபர் தலைமையில் அவசர கலந்துரையாடல்

(மன்னார் நகர் செய்தியாளர்)



மன்னார் மாவட்டத்தில் தடைகளின்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று (04) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரச, தனியார் போக்குவரத்து சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பு பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கல் அமுலாக்கபட்டுள்ள நிலையில் மாவட்டத்திற்கு தேவையான எரிபொருட்களை சீரான வகையில் சகல தரப்பினருக்கும் உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு அரச அதிபர் நன்றிகளை தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடிப் படகு மற்றும் ரோலர் படகுகளுக்குத் தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைவாக மாவட்டத்திலுள்ள மீனவ அமைப்புகள் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களினூடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்திலுள்ள வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, மாவட்டத்தில் திடீரென மின் தடங்கல் ஏற்படுகின்றபோது உடனடியாக அவசர தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும், குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்கு தேவையான எரிபொருளை சிரமங்களின்றி பெற்றுக்கொடுக்கவும், பயணிகள் சேவையில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பஸ்களுக்கு உரிய வகையில் எரிபொருளை பெற்றுக்கொடுக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களுமின்றி உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என அவர் கோரிக்கை விடுத்தார்.

## 04.04.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 105 5281 | 116 283 |
| கனேடியன் டொலர் | 120 2382 | 130 4122 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 314 | 36 4376 |
| யூரோ | 212 0786 | 223 4 1 |
| ஜப்பான் யென் | 1 2548 | 1 3561 |
| சிங்கப்பூர் டொலர் | 103 2524 | 111 4624 |
| ஸ்ரேலிங் பவுன் | 27 4270 | 283 8170 |
| சுவிஸ் பிராங்க் | 201 762 | 214 7771 |
| ஐ.அ.டொலர் | 178 6144 | 188 8803 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 713 3670 |
| குவைட் | குவைட் தினார் | 0, 10 7057 |
| ஓமான் | ஓமான் றியால் | 7 6 30 4 |
| கட்டார் | கட்டார் றியால் | 74 1 72 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 71 7554 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 73 5208 |

# யாழில் உயர் தொழில்நுட்ப மாணவர்கள் போராட்டம்



(யாழ். செய்தியாளர்)

யாழ். மாவட்ட உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் அரசாங்கத்திற்கு எதிராக யாழ் நகரில் போராட்டமொன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது.

கல்வி, சுகாதாரம், பொருளாதாரத்தின் வீழ்ச்சியில் மக்கள் வாழ்க்கையை நசுக்கிடும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டக்காரர்கள் நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்திலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கு சென்றனர்.

போராட்டம் காரணமாக யாழ் மாநகரில் சில மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

# தெஹியோவிட்டவில் பதற்றம்



(அருண் யுகேஷ்)

தெஹியோவிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களாக மக்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள காத்திருந்தனர். டீசல் இல்லாத காரணத்தால் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக அவிசாவளை - கேகாலை பிரதான வீதியை மறித்து ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை உருவானது. அங்கு காத்திருந்த தெஹியோவிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இடத்திற்கு வந்து எரிபொருள் பெற்றுத் தருவதாகவும் உறுதிமொழி அளித்ததை முன்னிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# மிரிஹானையில் பஸ்ஸுக்கு தீ வைத்த நபர்கள் யார்?

## கண்டறிய பொதுமக்களின் உதவியை நாடியுள்ள பொலிஸார்

மிரிஹானையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதான வன்முறைச் சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்களை கைதுசெய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

அண்மையில் மிரிஹானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பழைய கொட்டாவ வீதியில் பெங்கிரிவத்தை சந்திக்கருகில், வன்முறையை தூண்டும் வகையில் செயற்பட்ட சிலர் பொது சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியதோடு, பஸ் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு தீ வைத்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. பஸ்களுக்கு தீ வைத்தமை தொடர்பில் உரிய சந்தேகநபர்களை கண்டறிவதற்காகவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 0718 591 755 அல்லது 0718 594 929 மற்றும் 0112 444 265 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல்களை அறிவிக்கமுடியுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கையர்களால் கிறிஸ்ட்சேர்ச் நகரில் நேற்று (04) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: சங்க வித்தானகம)



அரசாங்கத்துக்கு எதிராக புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகளால் நேற்று (04)போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# நாட்டில் போராட்டங்களால் சுற்றுலாத்துறை பாதிப்பு

நாட்டில் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கையினால் சுற்றுலாத்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை நாட்டின் பொருளாதாரத்தை ஈட்டித்தரும் முக்கிய துறையாகும். இந்த வருடம் பத்து இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்துவருவது இலக்காக இருந்தாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை, இதற்கு பாரிய இடையூறாக அமைவதாக பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பேராசிரியர் சந்திரசேகரத்தின் மறைவுக்கு மு.கா. தலைவர் ஹக்கீம் அனுதாபம்

இலங்கையிலும் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் மறைவு பொதுவாக கல்வித்துறைக்கும், நாட்டுக்கும் பாரிய இழப்பாகும் - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் முன்னர் கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தது மட்டுமல்லாமல், நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்சியையூட்டுவதற்கு அயராது பாடுபட்ட ஒருவராக இருந்திருக்கிறார். தமிழ் மக்களின் கல்வியில் மட்டுமல்ல, பொதுவாக சிறுபான்மை மக்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் முஸ்லிம்களும் சிறந்து விளங்க வேண்டும் என அவர் மனதார விரும்பினார். இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்திலும், சமூகம் சார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது பங்களிப்பு மகத்தானது.

குறிப்பாக, மலையகத்தில் பிறந்தவர் என்ற வகையில் மலையக மக்களைப் பெரிதும் மையப்படுத்தியதாக அவரது எழுத்துகள் இருந்தன. அவர் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி நேர்காணல் செய்யப்படுபவராகவும் இருந்திருக்கிறார்.

அத்துடன், தனிப்பட்ட முறையில் நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நான் எழுதிய தந்தை செல்வநாயகம் பற்றிய ஒரு நூலைப் பாராட்டி அவர் எழுதிய கருத்துகளை இன்றும் நான் பெரிதாக மதிக்கின்றேன்.

எந்தவிதமான வித்தியாசமுமின்றி, கல்விச் சமூகத்தினருடன் மட்டுமல்லாது, சாதாரண பொதுமக்களுடனும் கூட மனம் விட்டு பழகக்கூடிய தன்மையை இயல்பாகவே அவர் கொண்டிருந்தார். எந்தவிதமான ஆரவாரமுமின்றி கல்விப் பணியில் தனது காலத்தை அவர் முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பதிவு செய்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# கொட்டும் மழையிலும் போராட்டம்



(ஹாலிஎல செய்தியாளர்)

ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களும் பதுளையில் கொட்டும் மழையிலும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கமே காரணம் எனச் சுட்டிக்காட்டிய அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாக பதவி விலகுமாறு கோரி கொழும்பு, தியத்த உயன பகுதியில் நேற்று (04) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்படிப்பு: ஏஷான் தசநாயக்க)



"பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திரமுனை நோக்கிய பேரணி" என்ற தொனிப் பொருளில் ஐக்கிய மகளிர் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் பேரணி நேற்று கேகாலையில் இடம்பெற்றது.


## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ செயலாளர் பிரிவிலுள்ள சாமிமலை 320 D கிராமசேவகர் பிரிவிலுள்ள ஸ்ரஸ்ப்பி தோட்ட ஹோமிடெல் டிவிசனில் வசிக்கும் ரட்னம் என்ற 5740 என்ற இலக்கம்கொண்ட பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயருடன் எனது தந்தை பெயரை இணைத்து அந்தோனி ரட்னம் என இணைந்துள்ளதென்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

ஒப்பம். அந்தோனி ரட்னம்

## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| WP KT - 1XXX | ZE2-1307191 | CAR | DAA ZE2 HONDA |
| SG PP - 9XXX | MAILT2FTTA5L45893 | DUAL PURPOSE | GIO LOAD CARRIER MAHINDRA |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 ஏப்ரல் 06, 07ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை. ஏப்ரல் 08ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 2022 ஏப்ரல் 08ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள மற்றும் டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன்பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

கடன் அறவீட்டு அதிகாரி,
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.
இல. 165, கின்சி வீதி கொழும்பு 08
தொலைபேசி இல. : 0112 000 000

COMMERCIAL CREDIT

நாடுபூராகவும் மக்களின் வீதிப்போராட்டங்கள் தீவிரமடைந்துக் கொண்டிருக்கின்றன. இன, மத, பேதமின்றி நாட்டு மக்கள் தாங்கள் எதிர் நோக்கும் பொருளாதார இடர்பாடுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திடம் நிவாரணம் கேட்டு தொடங்கிய போராட்டங்கள் இன்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கேட்பதில் வந்து நிற்கிறது. நாட்டு மக்களின் செய்தியை ஆட்சியாளர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டதாக தெரியவில்லை.

அரசாங்கத்தினால் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு குறைந்தபட்ச தீர்வொன்றை காண்பதற்கான யோக்கியதை கூட இல்லை என்பதை தெளிவாக விளங்கிக்கொண்ட மக்கள், ஆட்சிமாற்றம் ஒன்றையே வேண்டி நிற்கிறார்கள் என்பது வெளிப்படையானது. அதேவேளை, வீதியில் நிற்கும் மக்கள், எதிரணியில் இருக்கக்கூடிய எந்தவொரு அரசியல் தலைவரையும் முன்னிலைப்படுத்தி கோஷமெழுப்பவில்லை. இதன் மூலமாக எதிரணி அரசியல் தலைவர்களுக்கும் மக்கள் ஒரு தெளிவான செய்தியை கூறுகிறார்கள். ஆளுந்தரப்பு என்றோ அல்லது எதிரணி என்றோ வித்தியாசம் இல்லாமல் முழு அரசியல் வர்க்கமுமே நாட்டை காப்பாற்றத் தவறிவிட்டதாகவே மக்கள் உணருகிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

நேற்று முன்தினம் இரவு அமைச்சர்கள் சகலரும் தங்களது பதவி விலகல் கடிதங்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்கள். அவர் அந்தக் கடிதங்களை நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார். அந்தப் பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, இன்றைய தேசிய நெருக்கடியை கையாள்வதற்கு தான் அமைக்கவிருக்கும் புதிய அமைச்சரவையில் இணைந்து கொள்ளுமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் அழைத்திருக்கிறார். ஆனால், இந்த ஆசிரியர் தலையங்கத்தை எழுதுகின்ற தருணம் வரை ஜனாதிபதியின் அழைப்புக்கு எந்தவொரு நாடாளுமன்ற கட்சியும் பதிலளித்ததாக இல்லை. ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையில் நாடாளுமன்றக் கட்சிகள் சகலதையும் உள்ளடக்கிய அமைச்சரவை ஒன்றை கேட்டுத்தான் மக்கள் போராட்டத்தில் இறங்கினார்கள் என்றும் இல்லை. அதனால் மக்களின் வீதிப்போராட்டங்களை ஜனாதிபதியின் புதிய வியூகம் தணிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. இதனிடையே புதிய அமைச்சரவை அமைக்கும்வரை இடைக்கால ஏற்பாடாக நான்கு அமைச்சர்களை புதிதாக ஜனாதிபதி நியமித்திருக்கிறார். நிதியமைச்சராக அலி சப்ரியும் வெளியுறவு அமைச்சராக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்தனவும் நெடுஞ்சாலை அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் நாடாளுமன்றம் நாளை கூடவிருக்கிறது. நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைப்பதற்கான


தமிழன் THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 05ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# நீக்கப்படவேண்டிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை!

சாத்தியப்பாடுகள் இருப்பதாக எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆனால், அவர் அவ்வாறு செய்வாரோ தெரியவில்லை.

இலங்கையில் முன்னென்றும் இல்லாத மக்கள் கிளர்ச்சி அரசியல் வர்க்கத்துக்கு பல பாடங்களை புகட்டிக்கொண்டிருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத, மக்களின் பிரச்சினைகள் மீது பிரக்ஞை இல்லாத எந்தவொரு அரசாங்கத்தையும் இனிமேல் இலங்கை மக்கள் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை என்பதே அதில் முக்கியமானதொரு பாடமாகும். மக்கள் தாங்களாகவே வீதிகளில் இறங்கிப் போராடுகின்றார்களே தவிர, எதிரணியை சேர்ந்த எந்தவொரு அரசியல் கட்சியும் மக்களின் அந்தப் போராட்டத்தை சரியானமுறையில் தலைமைதாங்கி வழிநடத்துவதற்கு தாங்கள் முன்வருவதாக துணிச்சலுடன் அறிவிக்கவில்லை. மக்கள் தாங்களாகவே வீதியில் இறங்குகிறார்கள். அரசியல் கட்சிகளும் தனியாக தங்கள் போராட்டங்களை நடத்துகின்றன. இன்றைய தேசிய நெருக்கடியை தணிப்பதற்கு பொதுஜன ஆதரவுடனான அரசியல் மார்க்கத்தை கடைப்பிடிக்க திராணியற்றதாக இருக்கின்றன என்பதே இதன்மூலம் உணரக்கூடியதாக இருக்கிறது. இன்றைய ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு எதிரணியில் உள்ள ஒருவரை முடிசூட்டுவதற்கு மக்கள் வீதிகளில் இறங்கவில்லை என்பது நிதர்சனமானது.

தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தரக்கூடியவர்களாக எந்த தலைவரையுமே மக்கள் அடையாளம் காணவில்லை என்பதே இதன்மூலம் உணரக்கூடியதாக இருக்கிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில், நாம் முக்கியமான ஓர் அரசியல் பிரச்சினையை நோக்கவேண்டியிருக்கிறது. அதாவது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றபோதிலும், அது ஒரு வெகுஜன கோரிக்கையாக கிளம்பியதில்லை. ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப்போவதாக ஜனாதிபதித் தேர்தல்களின்போது வாக்குறுதி அளித்து பதவிகளுக்கு வந்த சகல தலைவர்களுமே ஜனாதிபதி பதவிக்கு இருக்கக்கூடிய மட்டுமீறிய அதிகாரங்களை அனுபவித்திலேயே ஆர்வங்காட்டினார்கள். இன்றைய ஜனாதிபதி, அவர்கள் எல்லோரையும் விடவும் மிஞ்சி முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா அறிமுகப்படுத்திய அதிகாரங்களையும் விட கூடுதலான அதிகாரங்களை கொண்டவராக தன்னை அரசியல் அமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் மூலம் மாற்றிக்கொண்டார்.

மக்கள் இன்று அத்தகைய அதிகாரத்தைக்கொண்ட ஜனாதிபதியையே பதவி விலகுமாறு கேட்கிறார்கள். ஜனாதிபதி ஆட்சிமுறையின் விபரீதங்களை அவர்கள் தற்போது புரிந்து கொண்டிருக்கிறார்கள். குடும்ப ஆட்சியின் விளைவுகளை அவர்கள் அனுபவித்துவிட்டார்கள். அதனால் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு மக்களின் ஆதரவுடன் கூடியதொரு சூழ்நிலை தோன்றியிருக்கிறது. ஜனாதிபதி கோட்டாபயவை வீட்டுக்கு செல்லுமாறு கேட்கின்ற மக்கள், அதே இடத்தில் இன்னொருவரை வைத்துப்பார்க்க போராடவில்லை. மக்களின் போராட்டங்களின் மூலமான அரசியல் செய்தி, மட்டுமீறிய அதிகாரங்களுடன் கூடிய ஆட்சியாளர் தேவையில்லை என்பதேயாகும். அதனால் முன்னென்றும் இல்லாதவகையில், மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கும் சூழ்நிலையை பயன்படுத்தி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கான அரசியல் நிகழ்ச்சி நிரலை சகல அரசியல் கட்சிகளும் குறிப்பாக, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முன்னெடுக்கத் தயாராக வேண்டும். இதற்கு நாடளாவிய ரீதியில் மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவை ஒரு வரப்பிரசாதமாகக் கருதி சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்.

# இலங்கை வீழ்ச்சி உணர்த்தும் உண்மை!



நம்முடைய புராணங்கள், இதிகாசங்கள் தொடங்கி வரலாறு வரை இலங்கை தேசம் இடம்பெற்றிருக்கிறது. கம்பராமாயணத்தில், குபேரனின் வாசஸ்தலம் என்றும் ஐஸ்வரிய லட்சுமி குடிகொண்ட தேசம் என்றும் இலங்கை சொல்லப்பட்டிருக்கிறது.

"ஈழ நாட்டுக் குறம் என்ற நூல், கனிபெற என்றொரு குறத்தி காதணியை வீச கடுவனதைக் கைபிடித்து காதலின் காதில் நனிஅழுத்த... என்று கூறுகிறது.

அதாவது, மரத்தில் இருக்கும் கனியை விரும்பிய பெண், அதனை வீழச் செய்வதற்காக தன்னுடைய காதணியைக் கழற்றி எறிகிறாளாம்.

மரத்திலிருந்த ஆண்குரங்கு காதணியைப் பிடித்து, தன்னுடைய காதலி குரங்குக்கு அணிவிக்கிறதாம். இப்படி வளமான நாடு என்று இலங்கையை வர்ணிக்கிறது அந்நூல்.

அத்தகைய இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலை குலைவால் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உலகமே இலங்கையை பரிதாபத்தோடு பார்க்கிறது. புதைம பீடித்திருக்கும் இந்த தேசத்திலிருந்து வெளியேறினால்தான் வாழ்வென்பதே சாத்தியம் என இலங்கையின் இளைஞர்கள் தங்கள் நாட்டைத் துறந்து வெளிநாடுகளில் தஞ்சமடைய பலநாட்டுத் தூதரகங்களின் வாயிலில் வரிசையில் காத்திருக்கின்றனர். உயிரைப் பணயம் வைத்து கடல் மார்க்கமாக தமிழ்நாட்டில் படகில் வந்திறங்கியவர்கள் அங்கே நிலவும் பஞ்சத்திற்கு சாட்சியாக நிற்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காத நிலை, உணவுப் பொருட்களின் விலை உயர்வு என்று சென்ற ஆண்டு முதலே இலங்கையில் பிரச்சினைகள் தலைதூக்கின. கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா நோய்த்தொற்றினால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் ஒருபுறம். அதே நேரத்தில் அரசின் தவறான கொள்கை முடிவுகளால் தோன்றியிருக்கும் சிக்கல்கள் மறுபுறம். அரசு கையறு நிலையில் இருக்கிறது.

நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா போன்ற நாடுகளில் அதிக அளவில் கடன் வாங்கியும் வருகிறது. சர்வதேச செலாவணி நிதியத்திடம் கடன் பெறவும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்வதாக சொல்லப்படுகிறது.

இலங்கையில் பெரும்பாலும் மின் உற்பத்தி நிலையங்கள் டீசலை நம்பியிருப்பவை. டீசல் இறக்குமதிக்கான வசதி இன்மையால் அவையும் உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன. சில உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் பல மணி நேர மின்வெட்டு நீடிக்கிறது.

பெரும்பாலான இடங்களில் 13 மணி நேரம் வரை மின்வெட்டு இருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை அத்தியாவசியப் பொருட்களான பால் மாவு, சர்க்கரை, முட்டை, பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு என அனைத்தும் இறக்குமதியை நம்பியிருப்பதால், அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தட்டுப்பாடு விலை உயர்வுக்குக் காரணமாகியிருக்கிறது.

ஒரு கிலோ பால் பவுடர் இரண்டாயிரம் ரூபா, ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நான்காயிரத்திற்கும் மேல், ஒரு லீற்றர் பெற்றோல் 254 ரூபா, டீசல் ஒரு லீற்றர் விலை 176 ரூபா. அதற்கும் கூட்டம், தள்ளுமுள்ளு.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இராணுவப் பாதுகாப்பு. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் பணத்திற்கு அலைந்தால் மற்றவர் பொருட்கள் வாங்குவதற்கான வரிசையில் காத்திருப்பது என்று இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கை நகர்கிறது.

இதனால் பொறுமையிழந்த மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொருளாதார நெருக்கடியைத் தடுக்கத் தவறியதால் ஜனாதிபதி பதவி விலகக்கோரி, ஜனாதிபதி மாளிகை முன் பொதுமக்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர். பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் மக்களைக் கலைத்து போகச் செய்தனர்.

இந்தப் போராட்டத்தில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறையில் பொலிஸார் தரப்பில் ஐந்து பேர் காயமடைந்ததாகவும், பொலிஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு, நுகேகொடை ஆகிய பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

போராட்டங்கள் தீவிரமடைந்த நிலையில், இலங்கையில் அவசரநிலை பிறப்பித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய. இது குறித்த அவரின் அறிவிப்பில், "பத்து நாள் இந்த அவசரநிலை நீடிக்கும்; அதன்பின் நிலைமைக்கேற்ப முடிவு செய்யப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டங்கள் இந்த அவசரநிலையினால் செயலிழக்கும். அவசரநிலை காலங்களில் கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான உரிமை இல்லாமல் போகும்.

பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கும் நபர் என்று கருதும் ஒருவரை மூன்று மாத காலத்திற்கு எவ்வித விசாரணையும் இல்லாமல் சிறைப்படுத்த முடியும். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவார் எனக் கருதும் எந்தவொரு நபரையும் கைது செய்யும் அதிகாரம் பாதுகாப்புப் பிரிவுக்கு இந்த சட்டத்தினால் கிடைக்கும். இதனால் சுதந்திரமில்லாத சூழல் ஏற்படலாம்.

அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள், பொருட்களைப் பெறமுடியாத நிலையில் மக்களின் ஏமாற்றம், இவை அவர்கள் மனதில் அமைதியின்மையை ஏற்படுத்தியதால்தான் போராட்டங்கள் வெடித்தன.

அவசர நிலை அறிவிக்கப்பட்டதால், பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை சரியான முறையில் மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். பொது சொத்துகள் பாதுகாக்கப்படும்.

அவசர நிலையின் சாதக பாதகங்கள் ஒருபுறமிருக்க, ஒரு தேசம் இத்தகைய நெருக்கடிக்கு உள்ளாவதற்கான காரணங்களை நோக்க வேண்டியது அவசியம். உலக நாடுகளின் தலைவர்களுக்கு இலங்கை பாடம் கற்றுக் கொடுக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் தேயிலை உற்பத்தி, சுற்றுலா இவற்றைப் பொறுத்தே இருக்கிறது. உலகம் முழுவதும் நிலவும் கொள்ளை நோய்த்தொற்று குறித்த அச்சத்தால் சுற்றுலா சார்ந்த வருமானம் முற்றிலும் இல்லாமல் போயிருக்கிறது.

தேயிலை உற்பத்தியும், ஏற்றுமதியும் நாட்டையே வாழவைத்து வந்த நிலையில், நூறுசதம் இயற்கை முறை விவசாயத்தை முன்னெடுப்பதாகக் கூறி, சென்ற ஆண்டு அரசு செயற்கை உரங்களுக்குத் தடை விதித்தது. இதனால் தேயிலை உற்பத்தியும், ஏற்றுமதியும் பெருமளவில் குறைந்து விட்டன.

முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தால், படிப்படியாக செய்து வெற்றி கண்டிருக்க வேண்டிய திட்டம், நாட்டின் சரிவுக்கே காரணமாகி விட்டது.

அரசின் தவறான முடிவுகளும், ஊழலும் நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் தள்ளியுள்ளன. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிக்குறைப்பு செய்வோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சியைப் பிடித்த கோட்டாபய, ஆட்சிக்கு வந்ததும் அரசின் வரிகளை ஏறத்தாழ பாதி அளவுக்குக் குறைத்து விட்டார். இதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பினை சரிசெய்ய அவரிடம் திட்டம் ஏதுமில்லை. வரிவருவாய் குறைந்த பின்னர், மேம்பாட்டுத் திட்டங்கள் சாத்தியமற்றுப் போய்விட்டன.

அந்நிய செலாவணி இருப்பு குறைந்ததால் பண மதிப்பு குறைந்துள்ளதும், அதனால் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வும் மோசமான நிதி நிர்வாகத்தின் சான்றுகள். அத்தியாவசியப் பொருட்களுக்கு, பிற நாடுகளை எதிர்பார்க்காமல் தங்கள் நாட்டில் அதற்கான உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லாமையும் ஒரு காரணம்.

இலங்கை மக்களின் இன்றைய நிலைக்கு ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, மக்களும் ஒருவகையில் பொறுப்பேற்க வேண்டும். ஜனநாயக நாட்டில் சிறந்த நிர்வாகத்தை வழங்கும் கட்சிகளை மக்கள் ஆதரித்து ஆட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும். அப்படி இல்லாமல் இனவாதம் பேசும் கட்சிகளின் பக்கம் நிற்பது எந்நாளும் வளர்ச்சிக்கு வழிவகுக்காது.


இலங்கை அரசியல் எப்போதும் இனவாதத்தையே கையில் எடுத்து செயல்படுகிறது. சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள் என்று தேசம் பிளவுபட்டு நிற்கிறது. ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவது அங்கே சாதாரணமாக இருக்கிறது. ஒரு தேசத்தின் வளர்ச்சி அந்த மக்கள் ஒன்று கூடி உழைக்கும் பொழுதுதான் சாத்தியமாகும்.

அரசியல்வாதிகள், தங்களின் சுய இலாபத்திற்காகவும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் இனவாத சிந்தனையை மக்கள் மனங்களில் விதைக்கிறார்கள். அரசியல்வாதிகளின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு சரியான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியது ஜனநாயகத்தில் குடிமக்களின் கடமை.

ஓர் இனம் அழிய மற்றோர் இனம் வேடிக்கை பார்க்குமானால், தனக்கும் அத்தகைய நிலை நாளை ஏற்படக்கூடும் என்ற புரிதல் இல்லாமல் போகுமானால், அந்த தேசத்தின் வீழ்ச்சியை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இலங்கையின் வீழ்ச்சி கற்றுக்கொடுக்கும் பாடம் இதுதான்.

**கோதை ஜோதிலட்சுமி**
**நன்றி – தினமணி**

## தவக்கால சிந்தனை



**போனபின் தேடுவீர்கள்!**

"நான் போனபின் நீங்கள் என்னைத் தேடுவீர்கள். நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது" என்னும் ஆண்டவர் இயேசுவின் அமுத மொழிகளை இன்று தியானிப்போம்.

"தேடுங்கள், கண்டடைவீர்கள்" என்று சொன்ன அதே இயேசுதான், 'நான் போனபின் என்னைத் தேடுவீர்கள், ஆனால் உங்களால் கண்டடைய முடியாது' என்றும் கூறுகிறார்.

"ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள்" என்னும் சொற்களை இன்று நாம் நினைவுகூர்வோம். இறைவன் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கு, இறையருள், அவருது பேரிரக்கம் நம்மைவிட்டு விலகியபிறகு, அவரைத் தேடி என்ன பயன்? வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுவோம்.

இத்தவக்காலம் அவரைத் தேடுவதற்கான நல்லதொரு காலம். எனவே, செபம், தவம், அன்புச் செயல்கள் மூலமாக இன்றே, இப்போதே இறைவனைத் தேடுவோமாக!

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

1836 – சாமுவேல் கோல்ட் 34-கேலிபர் சுழல் கைத்துப்பாக்கிக்கான காப்புரிமம் பெற்றார்.

1857 – கொழும்பு கோட்டையில் தற்போதும் இயங்கும் மணிக்கூட்டுக் கோபுரம் (பழைய கலங்கரை விளக்கம்) கட்டி முடிக்கப்பட்டது.

1953 – சோவியத் ஒன்றியத்தின் நீண்டகாலத் தலைவராக இருந்த ஜோசப் ஸ்டாலின் மொஸ்கோவில் மூளை இரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்தார்.

1964 – இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.

1982 – சோவியத்தின் வெனோரா 14 விண்கலம் வெள்ளிக் கோளில் தரையிறங்கியது.

2008 – இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

# அரசுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டம்










கொழும்பு சுதந்திர சதுக்கத்தில்...







கந்தளாயில்...



மொரட்டுவையில்...



மீரிகமையில்...







களுத்துறையில்...



ஹங்வெல்லயில்...



திஸ்ஸமாஹராமயில்....








பலபிட்டியில்...



கண்டியில்...



தம்புள்ளையில்...



பதுளையில்...






வெளிமடையில்...





அவிசாவளையில்...

படப்பிடிப்பு:- ஏஷான் தசநாயக்க, மஹிந்த சேனாரத்ன, சுனில் சாந்த, மனோஜ் எதிரிசிங்க, தர்ஷன் கானில், ஏ.ஏ.பிரேமசிறி, ஆர்.எஸ்.தர்மதாச, ஜனக்க பண்டார, கெலும் குணதிலக்க, த.அசோக்குமார், அருண் யுகேஷ், காஞ்சன ஆரியதாச, ஆர். வெந்தசிங்க.




அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக பதுளை பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த.அசோக் குமார்)



“விலைவாசி உயர்வு, சமையல் எரிவாயு, டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக நாட்டு மக்களை பட்டினியோடும் பசியோடும் மக்களை வதைக்கும் கோட்டாபய அரசும் ராஜபக்ஷ குடும்பமும் நாட்டை குட்டிச்சுவராக்காமல் உடனே நாட்டை விட்டு வெளியேறு” என மாத்தளை மாநகர மணிகோபுர சந்தியில் நேற்று (04) மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள் : மாத்தளை நிருபர்)

## பொகவந்தலாவையில் பாரிய ஆர்ப்பாட்டம்





(க.கிஷாந்தன்)

நாட்டின் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிராகவும் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் பொகவந்தலாவை டின்சின் நகரில் நேற்று (04) பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேறுமாறு கோஷங்கள் எழுப்பி பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் டின்சின் மற்றும் அப்பகுதியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு : பொருட்கள் விநியோகம் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நகரம் மற்றும் கிராமப் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த மீன், மரக்கறி மற்றும் உணவுப் பொருட்களின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இத்தட்டுப்பாட்டினால் விநியோக பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விற்கப்படுவதாகவும் விநியோகத்தில் ஏற்பட்டு வரும் தட்டுப்பாட்டு நிலைமைகளால் பொது மக்கள் அதிக விலைகள் கொடுத்தாவது தமக்கு அவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள், இறப்பர் உற்பத்தியாளர்கள், வாழைச் செய்கையாளர்களும் பெரும் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு வருவதாக இத்தொழிற்துறை சார்ந்தோர் தெரிவிக்கின்றனர்.

## அரசுக்கு எதிராக போராட்டத்தில் இறங்கிய நுவரெலியா மக்கள்



(டி.சந்ரு, செ.திவாகரன்)

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளதையடுத்து, நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியாவில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று(04) நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் இருந்து ஆரம்பித்த எதிர்ப்பு போராட்டம் பிரதான பஸ் தரிப்பிடம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அரசுக்கு எதிரான பதாதைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலையேற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை பொது மக்கள் எதிர்நோக்கி வருவதைச் சுட்டிக் காட்டியும் உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் பேரணியாக மாறியது










(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பேரணியாக மாறியது. யாழ். பல்கலை முன்பாக மாணவர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதியை வெளியேறக் கோரி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் பல மாணவர்களின் பங்கெடுப்போடு, பல்கலையிலிருந்து யாழ். நகர் நோக்கி பேரணியாக சென்றது.

பல்கலை முன்பாக ஆரம்பமான பேரணி பலாலி வீதியூடாக பருத்தித்துறை வீதியினை அடைந்து, அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்தது. பஸ் நிலையம் முன்பாக சுமார் ஒரு மணிநேரம் மாணவர்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து, கஸ்தூரியார் வீதியூடாக ஸ்ரான்லி வீதியை அடைந்து அங்கிருந்து ஆரியகுள சந்தியை அடைந்து, மீண்டும் பலாலி வீதியூடாக மாணவர்கள் பேரணி பல்கலையை அடைந்தது. அதேவேளை, மாணவர்கள் பேரணியாக ஸ்ரான்லி வீதியூடாக செல்லும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் முன்பு சில நிமிடங்கள் தரித்துநின்று அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

## நாட்டு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு யாழ். பல்கலையில் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தம்!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, மாணவர் நலன்கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதுடன், விடுதிகளில் தங்கி நிற்கும் மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளிலுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளபோதிலும், மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கமைய சாவகாசமாக விடுதிகளை விட்டு வெளியேறுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

## யாழில் சட்டவிரோத கொல்களம் முற்றுகை: ஒருவர் கைது; மாடொன்று உயிருடன் மீட்பு!

(யாழ். நிருபர்)

யாழில் சட்டவிரோத கொல்களம் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு, 50 கிலோ நிறையுடைய மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மாடொன்றும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை ஏபி வீதியில் சட்டவிரோதமான முறையில் கொல்களம் ஒன்று இயங்கி வருவதாகவும், அங்கு மாடுகளை திருடி வந்து கொலைசெய்யப்பட்டு இறைச்சியாக்கி விற்கப்படுவதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் அடிப்படையில் குறித்த இடத்தை சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு நின்ற 42 வயதுடைய நபரை கைதுசெய்ததுடன், அவரிடம் இருந்து 50 கிலோ நிறையுடைய மாட்டிறைச்சியும் மீட்கப்பட்டிருந்தது.

அத்துடன், கொலை செய்வதற்கு அங்கு கட்டப்பட்டிருந்த மாடொன்றையும் பொலிஸார் உயிருடன்மீட்டதுடன், மாடுகளை கொலைசெய்து இறைச்சியாக்குவதற்கான ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# “ராஜபக்ஷ குடும்பத்தை விரட்டியடிப்போம்; கொள்ளையடித்த பணத்தை திருப்பிக்கொடு”

## அரசுக்கு எதிராக புத்தளத்தில் மக்கள் போராட்டம்




(ரஸீன் ரஸ்மின்)

பொருட்களின் விலையேற்றம் மற்றும் டீசல் உட்பட எரிபொருட்களை வழங்குமாறும், ஆட்சியாளர்களை பதவி விலகக் கோரியும் புத்தளம் - கொழும்பு முகத்திடலில் நேற்று (04) நண்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் என ஆண்கள், பெண்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

“ராஜபக்ஷ குடும்பத்தை விரட்டியடிப்போம், பிரச்சினைகளை தீர்ப்போம்”, “கொள்ளையடுத்த டொலர்களை திருப்பிக் கொடு”, “225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எமக்கு வேண்டாம்” , “எமது பிள்ளைகள் பசியோடு வாழ்கிறார்கள், உங்களது பிள்ளைகள் சுகபோகம் அனுபவிக்கிறார்கள்” என தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சுலோகங்களையும், தேசியக் கொடிகளையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பை முன்னெடுத்தனர்.

அத்துடன், பொதுமக்களை பாதுகாக்க முடியாவிட்டால், பொருத்தமானவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறுமாறும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர்.

# இராஜாங்க அமைச்சரின் சகோதரரை கைதுசெய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

## புத்தளத்தில் மக்கள் எதிர்ப்புக்கோஷம்





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் ஆராச்சிக்கட்டு நகரில் நேற்று (04) காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆராச்சிகட்டு பிரதேச சபை உறுப்பினரும், இராஜங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேராவின் சகோதரருமான ஜகத் நிஷாந்த பெரேராவை கைதுசெய்யக் கோரியும் அரசுக்கு எதிராகவும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விக்டர் அன்டனி பெரேரா தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசுக்கு எதிரான கோஷங்களும், ஜகத் சமந்த பெரேராவை கைதுசெய்யக் கோரியும் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆராச்சிகட்டு பிரதேச சபை உறுப்பினரான ஜகத் நிஷாந்த பெரேரா தலைமையிலானோர் ஆராச்சிக்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்களை தாக்கியதுடன், அவர்களின் சொத்துகளை தேசமாக்கியமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை சந்தேக நபரான ஆராச்சிகட்டு பிரதேச சபை உறுப்பினர் ஜகத் நிஷாந்த பெரேரா கைதுசெய்யப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆராச்சிக்கட்டு நகரிலிருந்து ஆராச்சிக்கட்டு பொலிஸ் நிலையம் வரை பேரணியாக சென்றனர்.

இதன்போது, ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேராவின் சகோதரருமான ஜகத் நிஷாந்த பெரேராவை உடனடியாக கைதுசெய்யக் கோரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது குறித்த பிரதேச சபை உறுப்பினரை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வாக்குறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மடக்கும்புரையில் ஆலமரக் கிளை முறிந்து வீழ்ந்தது



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடக்கும்புர புதுக்காடு பிரிவு ஆலய வளாகத்தில் அமைந்திருந்த ஆலமரத்தின் கிளை நேற்று மதியம் முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக ஆலயத்தின் ஒரு பகுதி சேதடைந்துள்ளது. இது குறித்து தோட்ட நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து கிளையை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# மூன்று நாட்களுக்குப் பின்னர் தலவாக்கலைக்கு டீசல்

## பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பு



(க.கிஷாந்தன்)

தலவாக்கலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சூழ மக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அத்துடன், வாகனங்களும் அணிவகுத்து நின்றன. இதனால் நகர்ப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

நாடளாவிய ரீதியில் டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இந்நிலையில், தலவாக்கலை நகரிலுள்ள எரிபொருள் நிலையத்திலும் டீசல் இருக்கவில்லை. சுமார் 3 நாட்களுக்குப் பிறகு நேற்றைய தினமே டீசல் விநியோகிக்கப்பட்டது.

டீசல் இன்மையால் பலரின் வாகனங்கள் வீடுகளிலும், வீதிகளிலும் அப்படியே நிற்கின்றன. சுமார் 20 லீற்றர் கேன்களுடன் சாரதிகள், நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதேவேளை, வாகனங்களும் நீண்ட வரிசையில் நிற்கின்றதை காணமுடிந்தது. பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



கேகாலை பொது வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டி மருத்துவமனைக்கு முன்பாக பணியாளர்கள் நேற்று (04) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவித்துள்ள ஊழியர்கள் அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டுமென வலியுறுத்தினர்.

வைத்தியசாலைக்கு முன்பாக நீண்டநேரம் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதால் அப்பகுதியில் நீண்டநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீரை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மக்களின் நாளாந்த தேவைக்கேற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால், மேற்படி மாவட்டங்களில் இனிவரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையின் காரணமாக பொதுமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.


# கண்டி நகரெங்கும் கறுப்புக் கொடிகள்

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கண்டி நகர் எங்கும் நேற்று கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட வர்த்தக சங்கங்கள் பல இணைந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் இவ்வாறு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

கண்டி சட்டத்தரணிகள் சங்கம், சிங்கள வர்த்தக முன்னணி, முஸ்லிம் வர்த்தக சங்கம், தமிழ் வர்த்தக சங்கம், மத்திய மாகாண வணிக மற்றும் தொழிற்சாலை சபை உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

# கிண்ணியாவில் அரிய வகை சிறுத்தைப் பூனை மீட்பு



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் அரிய வகை சிறுத்தைப் பூனையொன்று கிணற்றிலிருந்து மீட்கப் பட்டுள்ளதாக திருகோணமலை வனவிலங்கு ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருகோணமலை வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய நேற்று (04) மாலை கிண்ணியா பகுதியிலுள்ள கிணறொன்றில் தவறி விழுந்த இந்த அரிய வகை பெரிய சிறுத்தை பூனை ஒன்றை மீட்டுள்ளனர்.

இந்த அரிய வகை சிறுத்தை பூனை நாட்டில் அழிந்துவரும் இனமாக கருதப்படுவதுடன், இவ்வாறு மீட்கப்பட்ட இந்த அரிய வகை சிறுத்தை பூனை நேற்று மாலை கிண்ணியா வனப்பகுதியில் விடப்படுமென திருகோணமலை வனவிலங்கு ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தால் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடைவினைக் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சாவகச்சேரி நிருபர்)



# கிழக்கு மாகாணத்திலும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

## ★ பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் பேரணி

## ★ விலைவாசியை கண்டித்து கந்தளாயில் மக்கள் கோஷம்







திருகோணமலை





திருமலை அபயபுர சுற்று வட்டாரம்






கந்தளாய்

**(செங்கலடி, கந்தளாய் நிருபர்கள், அப்துல்சலாம் யாசீம், ரவ்பீக் பாயிஸ்)**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (04) தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், மக்கள், வைத்தியர்கள் என பலர் திருகோணமலை மற்றும் கந்தளாய் ஆகிய பிரதேசங்களில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

**திருகோணமலை**

அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கோரியும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று (04) ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் விவசாய பீடம் அமைந்துள்ள தொகுதியின் நுழைவாயிலில் ஆரம்பமான மாணவர்களது ஆர்ப்பாட்டப் பேரணி கொம்மாந்துறை திருவள்ளுவர் வீதியூடாக சென்று மட்டக்களப்பு - திருமலை வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை பிரதான வளாகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

பிரதான வீதியில் ஒன்றுகூடிய மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் கோஷங்களையெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உணவு இல்லை, எண்ணெய் இல்லை, மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை, பொருள் விலை, வரிச்சுமைகளை குறையுங்கள், மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**திருமலை அபயபுர சுற்று வட்டாரம்**

திருகோணமலை அபயபுர சுற்று வட்டாரத்தில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமொன்று நேற்று (04) முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் என்பவற்றைச் சுட்டிகாட்டி குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது

இதில் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டதுடன், பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ''கோட்டா வெளியேறு'' ''மக்களை வாழ விடு'', ''ராஜபக்ஷ பரம்பரை வெளியேறு'' போன்ற கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 150இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டதுடன், பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் திருகோணமலை அபயபுர சுற்று வட்டத்திலிருந்து நடைபவனியாக விகாரை வீதி, மரத்தடி சந்தி, பிரதான வீதி ஊடாக திருகோணமலை மணிக்கூண்டு கோபுரம் சுற்றுவட்டம் வரை சென்று அவ்விடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**கந்தளாய்**

திருகோணமலை, கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட கந்தளாய் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது .

அதிகரித்துவரும் விலைவாசியை கண்டித்து அரசுக்கு எதிராக நேற்று (04) வியாபார சங்கம், மக்கள் விடுதலை முன்னணி மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கந்தளாய் பஸ் தரிப்பிடத்திலிருந்து மணிக்கூட்டுக் கோபுர சந்திவரை மறித்து சுமார் ஒரு மணிநேரம் கோஷங்களை எழுப்பியவாறு கந்தளாய் வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் 103ஆவது ஆண்டு நிறைவு விழா



**(நிந்தவூர் நிருபர் )**

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் ( தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடியின் 103ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த ஏப்ரல் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கணித பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.கிருஸ்ணபிள்ளை சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் த.ஜனேந்திரராஜா, உப அதிபர்களான வீ.ரவீந்திர மூர்த்தி, எம்.ரவிச்சந்திரன், ஏ.கலாபராஜன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் வ.கண்ணன், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோத்தர்கள் பங்கேற்றனர்.

இதன்போது 103 வருட நினைவாக கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

## அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றங்கரையை சுத்தப்படுத்தும் மாபெரும் சிரமதான நிகழ்வு



**(சியாத்.எம்.இஸ்மாயில், சலீம் றமீஸ் )**

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றங்கரையினை சுத்தப்படுத்தும் மாபெரும் சிரமதான நிகழ்வு அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றம் மற்றும் கோணாவத்தை அபிவிருத்திக் குழு என்பனவற்றின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஸாபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்மாயில், பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.விவேக்சந்திரன் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட அரச நிறுவனங்களான பிரதேச செயலகம், பிரதேச சபை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், கோட்டக் கல்வி அதிகாரி காரியாலயம் மற்றும் அக்கரைப்பற்று நீர்ப்பாசனத் திணைக்களம், கரையோர சுற்றாடல் பாதுகாப்புத் திணைக்களம், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகிய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் கடந்த 10 வருடங்களாக இச்சிரமதான நிகழ்வு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளில் விளையாட்டுத்துறையை அபிவிருத்திசெய்யும் திட்டம் ஆரம்பம்





**(கல்குடா நிருபர்)**


விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளில் விளையாட்டுத்துறையை அபிவிருத்திசெய்யும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நேற்று (04) ஆரம்பித்துவைக்கப்பட்டன.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான நசீர் அஹமட்டின் முயற்சியினால் ஓட்டமாவடி மஜ்மாநகர் பொது விளையாட்டு மைதான புனரமைப்பு ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், பிரதேச சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எம்.ஹாசிம், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி இரண்டு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின்கீழ் மஜ்மாநகர் பொது விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



**கூண்டோட மந்திரிமார் விலகித்தாங்க நல்லது, இனி தேசிய அரசாங்கம் எண்ட போர்வையில் நம்மட கூட்டமைப்பு சம்மந்தரிட்ட உதவி கேட்டாலும் கேட்பாங்க தப்பித்தவறி ஆராவது அதற்கு ஆசைப்பட்டால் இப்ப இருக்கிற 10, எம்பில அடுத்த எலக்சனில 5, ஆக குறையும் எண்ட சங்கதிய சம்பந்தரும் அவரிர ஆக்களும் புரிச்சிருப்பாங்க எலுவா**

**இருந்தாலும் நரி மாமா ரணில் புலிகளை உடைத்து பெருமை பேசியவர், இப்போ கூட்டமைப்பை சிதைக்கிறதுதான் அவரிட ஆசை இதுக்குள பூந்து விளையாடி கூட்டமைப்ப நாசமாக்கும் எண்பதும் உண்மை பாப்பம் என்ன கூத்து நடக்கும் எண்டத!**

## பேராசிரியர் சந்திரசேகரத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!

### சமாதான கற்கை நிறுவனத்தின் தலைவர் றியாஸ் அனுதாபம்



**( நிந்தவூர் நிருபர்)**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடாதிபதியாக பதவி வகித்து ஓய்வுபெற்ற பேராசிரியர் சந்திரசேகரம் பின்னர் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் போன்ற பல முக்கியமான பதவிகளை வகித்தார்.

மலையக மக்களுக்கென்று தனியான பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கையை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த அவர், மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக குரல் கொடுக்கும் இயக்கங்களுடன் தன்னை அடையாளப்படுத்தி பல பணிகளை முன்னெடுத்தவர்.

கல்வியியல் துறைப் பிரச்சினைகளைப் பற்றி பேராசிரியர் எண்ணற்ற கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதிவந்தார். பல நூல்களையும் அவர் எழுதியிருக்கிறார்.

அன்னாரின் மறைவு கல்விச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் - என தனது அனுதாப செய்தியில் சமாதான கற்கை நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் குறிப்பிட்டுள்ளார்.

## திருகோணமலையில் பாடசாலை ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




**(ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை சிங்கள மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

மத்திய மகா வித்தியாலய பிரதான வாயிலுக்கு முன்பாக நேற்று (04) பிற்பகல் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசியை குறைக்குமாறும் ஆட்சிசெய்யத் தெரியாவிட்டால் வீடு செல்லுமாறும் பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கருத்து தெரிவித்த ஆசிரியர் ஒருவர், திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலானவர்கள் அன்றாடம் கூலித்தொழில் செய்பவர்களாகவும் மீன்பிடியை நம்பி இருப்பவர்களாகவும் இருக்கின்றனர். மேலும் அரசு அதிகாரிகள் என்றவகையில் எமக்கு வழங்கப்படுகின்ற சம்பளமானது தற்போதைய காலகட்டத்தில் எழுந்துள்ள விலைவாசி மற்றும் பொருளாதார நெருக்கடியில் பெரிதும் பாதிப்பை செலுத்தியுள்ளதாகவும் இதற்கான உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமாறும் மக்கள் நாடெங்கும் போராட்டம் என்ற வகையில் வீதிக்கு இறங்கியுள்ள நிலையில் மக்களை ஏமாற்றும் விதத்தில் அதே அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களை பதவி நீக்கு அமைச்சர்களுக்கு புதிதாக அமைச்சுப் பதவிகளை வழங்கியமை மக்களை ஏமாற்றுகின்ற செயல் எனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்

மேலும் இவ்வாறான செயற்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் அறியாமை தன்மையை மேலும் உறுதி செய்துள்ளதாகவும் மக்களின் வேண்டுகோளுக் கிணங்க அனைவரும் வீடு செல்லுமாறும் இதன்போது வேண்டிக்கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## 25 தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு!

மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம். எமது சேவைகளை திறன்பட வழங்கவேண்டும். அதற்கான ஊதியங்களை அரசாங்கம் எமக்கு வழங்குகின்றது. அதற்கேற்றாற்போல் எமது கடமைகளைச் செய்யவேண்டும் - என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சினால் நியமனம் வழகப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 25 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இணைப்புக் கடிதத்தை வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கூட்ட மண்டபத்தில் நேற்று (04) இடம்பெற்றது. இதன்போது அவர் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச பதவி வகிப்பவர்கள் சுறுசுறுப்பாகவும் சேவை மனப்பாங்குடனும், நேர்த்தியாகவும், மக்களிடம் இன்முகத்துடனும் தங்களது வேலைகளை செய்கின்றபோதுதான் அத்தொழிலுக்கு மகிமையும், உயர்வும் கிடைக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் ஒரு நிறுவனத்தில் சேவைபுரிகின்ற அரச ஊழியர்கள் சிறந்த சேவை மனப்பாங்குடனும், சிறப்பாகவும் தமது சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றபோதுதான் அந்த நிறுவனத்திற்கு வெற்றியும் உள்ளது.

மக்கள் சேவையை பெறுவதற்காக வரும் போது சேவை வழங்குனர்களின் நடத்தையை அவதானித்து தங்கள் மனதில் சேவை வழங்குனர் குறித்து பதித்துக்கொள்கின்றனர். அவ்வாறான மனப்பதிவுகள் சிறப்பாக இருக்கும்போதுதான் சேவையாளன் வழங்குகின்ற சேவையில் திருப்தி கொள்கின்றார்கள். அந்த நல்லதொரு மனப்பதிப்புகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வின்போது சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# ஊடகத்துறையில் வெள்ளிவிழாக் கண்ட இரு ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீலங்கா சமாதான கற்கை நிறுவனம் ஒழுங்குசெய்திருந்த சர்வதேச கல்விச்சுற்றுலா ஆய்வு மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது ஊடகத்துறைக்கு கடந்த 25 வருடங்களாக பங்களிப்பு செய்துவரும் இலங்கை சமாதான ஊடக அமைப்பின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எம்.ஜெஸ்மின் மற்றும் மூன்று மொழிகளிலும் தேசியத்திலும் சர்வதேசத்திலும் தனது ஊடக பங்களிப்பினை வழங்கிவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அஸ்ஹர் இப்றாஹிம் ஆகியோருக்கு சிறந்த ஊடகவியலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# நாட்டின் தற்போதைய நிலைக்கு 20 இற்கு கை தூக்கியோரும் பொறுப்புக்கூற வேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வலியுறுத்து

(கிண்ணியா, சீனக்குடா நிருபர்கள்)

ஜனாதிபதியின் தூர நோக்கற்ற செயற்பாடுகளாலேயே நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு 20ஆம் திருத்தத்துக்கு கை தூக்கிய அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியலமைப்பின் 20ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தினை அவர் தன்னிச்சையாகப் பயன்படுத்தியதாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனவே, ஜனாதிபதிக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் இந்த 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில், அவர்கள் வழங்கிய ஆதரவே ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்த்தது.

ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் பொதுத் தேர்தல் வரை பொதுஜன பெரமுனவோடு இணைந்து பணியாற்றியவர்கள் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கு ஏதோ ஒருவகையில் காரணம் கூற முடியுமாக இருக்கும்.



எனினும், ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் எம்மோடு ஒன்றாக இருந்தவர்கள், தேர்தல் மேடைகளில் எம்மோடு சேர்ந்து ஜனாதிபதிக்கு எதிராக வசைபாடியவர்கள் நாடாளுமன்றத்தில் கையில் 20 எதிர்ப்பு அடையாளத்தைப் பொறித்துக் கொண்டிருந்தவர்கள் ஜனாதிபதிக்கு வலுச்சேர்த்த 20ஆம் திருத்ததிற்கு திடீரென ஆதரவு வழங்கியமைதான் பெரிய ஆச்சரியமாக உள்ளது.

நேர்மையான சிந்தனை உள்ளவர்கள் இந்தச் செயலை இன்னும் வியப்போடுதான் பார்க்கின்றனர். குர்ஆன், ஹதீஸை முன்னிறுத்தி தங்களை பலப்படுத்திக்கொண்ட கட்சியைச் சேர்ந்த இவர்கள் எதிர்க்கட்சியோடு ஒன்றாக இயங்கி அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து பெரும் நம்பிக்கைத்துரோகத்தில் ஈடுபட்டமை மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை எமக்குத் தெரிகின்றது.

இவர்கள் திடீரென தடம் மாறியமைக்கு காரணம் என்ன, அரசோடு இவர்களுக்குள்ள டீல் என்ன என்பது குறித்தெல்லாம் பொதுமக்கள் நன்கு விளங்கி வைத்துள்ளார்கள். பொதுமக்களை எப்போதும் உணர்ச்சி வசப்படுத்தி ஏமாற்ற முடியாது என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது.

எரிபொருளுக்கு வரிசை, எரிவாயுவுக்கு வரிசை, பால்மா பெற முடியாது, இரவுபகல் பாராது தொடர்ச்சியான மின்வெட்டு, வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருட்களின் விலை மூன்று மடங்கு அதிகரிப்பு. இவைதான் இன்றைய நாட்டு நிலைமை. இதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் அவலங்களும், பிரச்சினைகளும் சொல்ல முடியாது.

பொதுமக்களுக்கு இவ்வளவு சோகங்கள் இருந்தும் 20இற்கு ஆதரவு வழங்கியோர் இன்று வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர். பொதுமக்களின் வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கொஞ்சமாவது கவனம் செலுத்த வேண்டும். குறைந்தது கருத்துகளாவது சொல்ல வேண்டும்.

இவை எதுவுமில்லாத அளவுக்கு அவர்களது டீல் அவர்களைக் கட்டிப்போட்டுள்ளது. அவர்களை மௌனிக்கச் செய்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# கண்ணீர் மல்க அதிபரை ஊர்வலமாக அழைத்துச்சென்ற நெகிழ்ச்சி சம்பவம்!





(மீராவோடை நிருபர்)

தனது 37 வருட கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள வாழைச்சேனை பரீட் அதிபருக்கு மகத்தான கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்றுச் செல்லும் இவருக்கு மாலை அணிவித்து, முஸ்லிம்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பக்கீர் இசைக்கப்பட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் கண்ணீர்மல்க வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து அவரது வீடுவரை ஊர்வலமாக அழைத்துச்சென்ற நெகிழ்ச்சியான சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (1) இடம்பெற்றது.

இவர், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் 13 வருடங்கள் அதிபராக சேவையாற்றி அப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

அத்துடன், அரசியல், சமூக சேவைகள், போன்றவற்றில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பிரதேசத்திற்கு தன்னாலான பங்களிப்பினை செய்துள்ளார்.

பரீட் அதிபரின் கல்விப் பணிக்காக அவரின் ஓய்வை முன்னிட்டு பாடசாலை நிர்வாகத்தினர் ஏற்பாடுசெய்த இந்த முன்மாதிரியான நிகழ்வு அனைவரினதும் பாராட்டுகளை பெற்றுள்ளது.

தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள இவரது சேவையை கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூகமட்ட அமைப்பினர்கள், பள்ளிவாசல்கள் நிர்வாகத்தினர்கள் எனப் பலரும் பாராட்டியுள்ளனர்.

# சமாதான நீதவானாக நியமனம்



வாழைச்சேனை, கோழிக்கடை வீதியைச் சேர்ந்த முஹம்மது பாருக் முஹம்மது இம்ரான் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானாக பதவியேற்றுக் கொண்டார்.

இவர் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# ஊரடங்கு உத்தரவையடுத்து திடீரென எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பூட்டு!

## மட்டக்களப்பில் மக்கள் முண்டியடிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

நாடு முழுவதும் சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருட்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோது திடீரென நிறுத்தப்பட்டது. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை(02) இரவு 6 மணியைக் கடந்த நிலையிலும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் மக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது.

எனினும், எரிபொருள் விநியோகிக்கப் படாததைத் தொடர்ந்து அப்பகுதியைச் சூழ மக்கள் மிகுந்த சிரமப்பட்டதையும், பெற்றோல், மற்றும் டீசல், மண்ணெண்ணெய் இன்மையால் தாம் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதனாலும், நாட்டில் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டதனாலும், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்ட சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளது என அவ்விடத்திலிருந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இரவு 7 மணியளவில் குறித்த எரிபொருள் நிலையத்திற்கு வருகைதந்த களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேவிக்ரம எரிபொருள் நிலையத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி, மீண்டும் எரிபொருட்களை மக்களுக்கு விநியோகிக்குமாறு தெரிவித்ததற்கிணங்க தொடர்ந்து எரிபொருட்கள் வழங்கப்பட்டன. எனினும், மக்கள் நீண்ட வரிசையில் பரபரப்புடன் முண்டியடித்துக் கொண்டுசென்றதையும் அவதானிக்க முடிந்தது.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்துக்கு கதிரைகள் அன்பளிப்பு



(கல்முனை நிருபர்)

முன்னாள் அமைச்சர், கலாநிதி மர்ஹும் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வியும், ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஸ்தாபகரும், பிரபல சமூக சேவையாளருமான சட்டத்தரணி மர்யம் நளீமுதீனால் (அவுஸ்திரேலிய முஸ்லிம் கவுன்சிலின் செயலாளர்) கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் விசேட கல்விப் பிரிவு மாணவர்களுக்குத் தேவையான ஒரு தொகுதி கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக்கின் தலைமையில் ஆசிரியர்கள், விசேட கல்விப் பிரிவு மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் முன்னிலையில் அண்மையில் இடம்பெற்றது.

# மட்டக்களப்பு புளியந்தீவு குழந்தை இயேசு பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை நிகழ்வு





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு, புளியந்தீவு குழந்தை இயேசு பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை, பாலர் பாடசாலை அதிபர் அருட்சகோதரி நிதர்ஷினி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு கல்விவலய முன்பள்ளிப் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கும், பராமரிப்புக்குமான உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜா கலந்துகொண்டார்.

இதன்போது பிள்ளைகள் வியாபாரிகள்போல் ஆடையணிந்து பல்வேறுபட்ட காய்கறிகள், பழங்கள், சிற்றுண்டி வகைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பொருட்களைக் கூவி விற்பனைசெய்ததைக் காணமுடிந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதம அதிதியால் மாணவர்களின் சிறப்பான செயற்பாடுகள் தொடர்பாகவும், அவர்களை வழிப்படுத்திய ஆசிரியைகள் தொடர்பாகவும் சிறப்பான கருத்துகள் தெரிவிக்கப்பட்டது.

# கல்முனை கிரீன்பீல்ட் றோயல் வித்தியாலய ‘புலமைத்தளிர்கள்’ கௌரவிப்பு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை கிரீன்பீல்ட் கமு/கமு/றோயல் வித்தியாலயத்திலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் அவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் ‘புலமைத்தளிர்கள்’ கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எச்.எம்.அன்ஸார் தலைமையில் பாடசாலை திறந்த அரங்கில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், மேலும் சிறப்பு அதிதிகளாக அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எம்.எவ்.ரஹ்மான், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி வீ.எம். ஸம்ஸம், கல்முனை கல்விவலய சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டு வளவாளர் ஹபீழ், ஆசிரிய ஆலோசகர் ஏ.றபீக், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவை பணிப்பாளரும், அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா தவிசாளருமான யூ.எல்.என்.ஹுதா, கல்முனை கிரீன்பீல்ட் கூட்டு ஆதன முகாமைத்துவ சபை தலைவர் ஏ.கலீலுர் ரஹ்மான், கல்முனை கிரீன்பீல்ட் பள்ளிவாசல் நிர்வாகிகள், பாடசாலை பிரதியதிபர் எம்.எம்.இப்ராஹிம் அடங்கலாக ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ‘புலமைத்தளிர்கள்’ கௌரவிப்பு நிகழ்வில் கடந்த 2016, 2017, 2018, 2019, 2020, 2021ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டதுடன், மாகாண மட்ட சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.







திருகோணமலை, முள்ளிப்பொத்தானை - கண்டி பிரதான வீதியில் எரிவாயுவை பெறுவதற்காக மக்கள் காத்திருந்தபோது

(படங்கள் - கிண்ணியா நிருபர்)

# ஊடகங்களை கட்டுப்படுத்த முயற்சித்தால் அது இறையாண்மைக்கு பாரிய தாக்குதலாகும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



ஜனநாயக ஆட்சியின் நான்காவது தூணாக செயற்படும் ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ ஓர் ஆட்சியாளன் முயற்சி செய்கிறான் எனின், அது மக்கள் இறையாண்மைக்கு சவாலானதும் இறையாண்மைக்கெதிரான மிகப் பாரிய தாக்குதலுமாகும் - என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இக்காலகட்டத்தில் அரசு அமுலுக்குக் கொண்டு வந்துள்ள சமூக ஊடக முடக்கமானது நாடு எதிர்காலத்தில் முகங்கொடுக்கவுள்ள ஆபத்துகளுக் கான முன்னெச்சரிக்கையாகும். நாட்டில் எந்தவொரு வகையிலும் அவசர நிலை உருவாகவில்லை. பயங்கரவாத செயற்பாடுகளோ நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய செயற்பாடுகளோ அரங்கேறவில்லை.

இன்று நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் மிகப் பாரிய சவால் எதுவென்றால், அன்றாட வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்ய அவசியமானவற்றை பெற்றுக்கொள்ள இயலாமையாகும். அதேபோன்று அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய மற்றும் பொறுப்புள்ள அரசிடமிருந்து எவ்வாறான உதவியும் பெறாமையாகும். அதற்காக அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும் என்று கேட்கும் பூரண உரிமை மக்களுக்குள்ளது. அது அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாகவே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைதியாக - ஆரவாரமின்றி ஒன்றுகூடல், கருத்து தெரிவித்தல், தகவலறிதல் மற்றும் தகவல்களை பரிமாறுதல் மக்கள் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளாகும். இத்தருணத்தில் அமுல்படுத்தப்படுகின்ற அவசரகால சட்டம், ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக வலைத்தள முடக்கம் என்பவை அரசியலமைப்பின் போர்வைக்குள் நின்று ஒரு குடும்பத்துக்கு சொந்தமானது என நம்பப்படும் அதிகாரத்தைப் பாதுகாக்க அரசு எடுக்கும் முயற்சியாகும்.

தற்போதைய ஜனாதிபதியை ஆட்சியில் அமர்த்துவதில் அன்றைய சமூக ஊடகங்கள் மேற்கொண்ட பணி அளப்பரியது. ஆட்சியைக் கைப்பற்றியவுடன் ஆட்சியைக் கைப்பற்ற உதவியவர்களை தாக்குவது ராஜபக்ஷ அரசியலின் வழமையாகும். அவர்கள் விமர்சனங்கள் மற்றும் அவர்களுக்கெதிரான கருத்துகளை சகித்துக் கொள்ளாது அச்சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு பதிலளித்தது அடக்குமுறையின் மூலமாகும் என்பது பரகசியமான உண்மையாகும்.

அண்மைக்காலமாக இடம்பெறும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், நிகழ்பதிவு உபகரணங்கள் (வீடியோ கெமராக்கள்) சேதமாக்கப்படுதல், சமூக ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படுதல் போன்ற நிகழ்வுகள் வெளிச்சத்துக்கு கொண்டுவருவது ராஜபக்ஷ அரசியலில் ஜனநாயக கோட்பாடுகளுக்கு இடமில்லை என்பதையாகும்.

நாட்டில் பிறப்பிக்கப்பட்ட சமூக ஊடக முடக்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி தமது கடுமையான எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்துக்கொள்கிறது. இந்த அடக்குமுறைக்கு எதிராக மக்களுடன் இணைந்து மற்றும் சட்ட ரீதியாக எடுக்க முடியுமான அனைத்துவிதமான முயற்சிகளையும் நாம் எடுப்போம். ஒரு குடும்பத்திற்காக நாட்டின் அடிப்படைச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அதற்கெதிராக எம்மோடு இணையுமாறு அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டத்தரணி காரியாலயங்கள் திருடர்களால் உடைப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நகரில் அமைந்துள்ள சட்டத்தரணிகள் ஆறு பேரின் காரியாலங்களில் கதவுகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெறறுள்ள இச்சம்பவங்கள் குறித்து பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டதற்கிணங்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். காணாமல்போன பொருட்கள் மற்றும் ஆவணங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பலாங்கொடை நகரம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இரவு, பகல் வேளைகளில் திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போதைக்கு அடிமையானவர்கள் இக்கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புத் தரப்பினர் இவ்விடயத்தில் இதைவிட அதிக அக்கறை செலுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



ஹட்டனில் டீசல் பெற்றுக்கொள்வதற்காக வாகனங்களில் சாரதிகள் நேற்று (04) நீண்ட நேரம் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: மனுர சுதத் செல்லஹேவா)

# ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் ரயில், பஸ் சேவைகள் தாமதம்

நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று (04) காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டது.

எனினும், காலையில் இடம்பெறவேண்டிய ரயில் சேவைகள் மற்றும் தூர இடங்களிலிருந்து இடம்பெறவேண்டிய பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. இதனால், அதிகாலையில் பயணங்களை மேற்கொள்ளவேண்டியவர்கள் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

பிரதான நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் காலைவேளையில் திறக்கப்படவில்லை. சில பஸ் நிலையங்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அறியமுடிகின்றது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்ட அவசரகால சட்டம், தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா அல்-அமீன் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 8 வகுப்பறைகளைக்கொண்ட 2 மாடிக் கட்டடம் திறந்துவைப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, பாவற்குளம், அல்-அமீன் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 8 வகுப்பறைகளைக் கொண்ட 2 மாடிக் கட்டடம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளாக கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோர் இணைந்து அதனை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தனர்.

குவைத்தின் தனவந்தர் ஒருவரின் 2 கோடி ரூபா நிதியில் 8 வகுப்பறைக்கொண்ட 2 மாடி கட்டடமாக இது அமைக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின்பேரில் குவைத்தின் தனவந்தர் ஒருவரின் நிதி உதவியுடன் அல்-ஹிமா இஸ்லாமிய சேவைகள் நிறுவனத்தின் அனுசரணையில் இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் எஸ்.புஹாரியின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஷ்குமார், குவைத்தின் இலங்கைக்கான தூதுவரின் பிரதிநிதி அஷ்ஷெய்க் பிர்தௌவ்ஸ், அல்-ஹிமா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.நூருல்லாஹ், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், கோட்டக்கல்விப் பணிப்பாளர், கல்வியலாளர்கள், பாடசாலை சமூகத்தினர் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# டீசல் தட்டுப்பாடு காரணமாக குப்பையகற்றும் பணி நிறுத்தம்

## ஜாஎலவில் பொதுமக்கள் பாதிப்பு



ஜாஎல நகர சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் வாகனங்களுக்கு டீசல் பெற்றுக்கொள்ள முடியாமல் போனமை காரணமாக அப்பணிகள் நேற்று முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

குப்பையகற்றும் வாகனங்கள் அனைத்தும் பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்ததை நேற்று அவதானிக்க முடிந்தது.

# “கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள்” போராட்டத்தால் வவுனியாவில் வீதி முடக்கம்






(வவுனியா செய்தியாளர்)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்து இளைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறும் பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்தும் பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டம் இடம்பெற்றதுடன், போராட்டக்காரர்கள் ஏ9 வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிதுநேரம் ஏ9 வீதியை மறித்துப் போராடிய அவர்கள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தாது பின்னர் பிரதான வீதியிலிருந்து விலகிச்சென்று வீதியோரத்தில் நின்று ‘‘கோட்டா வீட்டுக்கு செல்லுங்கள்’’ எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அப்பகுதியில் நின்ற இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் ஒருவர் மது போதையில் போராட்டக்காரர் மீது அருகிலிருந்த வெற்றிலைக் கடையிலிருந்து பெட்டி ஒன்றை தூக்கி வீசியிருந்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் அவருடன் முரண்பட்ட போது குறித்த ஊழியர் அங்கிருந்து தப்பி ஓடியிருந்தார். பின்னர் குறித்த நபர் மீள அங்கு வந்த போது அவரை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் அவரை கடுமையாக எச்சரித்தும் இருந்தனர். சுமார் ஒரு மணிநேரம் குறித்த போராட்டம் இடம்பெற்றதுடன், அரசுக்கு எதிராக கோஷங்களும் எழுப்பப்பட்டன. இவ்வார்ப்பாட்டத்தில் வவுனியா பல்கலைக்கழக பெரும்பான்மை இன மாணவர்களும், சிங்கள இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

# சப்ரகமுவ மாகாணத்தில் ‘ஆயுஷ் கிராமம்’ வேலைத்திட்டம்!



(சிவா ஸ்ரீதரராவ்)

சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் ‘ஆயுஷ் கிராமம்’ வேலைத்திட்டம் அண்மையில் கேகாலை திபுல்கமுவ கிராமத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலகம் மற்றும் ருவான்வெல பிரதேச செயலகம் என்பனவற்றை மையமாகக்கொண்டு 100 குடும்பங்களுக்கு மேற்படி வேலைத்திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் மாதம் ஒரு முறை மேற்படி அனைத்து வீடுகளுக்கும் வைத்தியர் ஒருவர் நேரில் சென்று கண்காணிப்பது மற்றும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடமாடும் சேவை நாத்துதல் உட்பட பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி வேலைத்திட்டம் இரத்தினபுரி மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கேகாலை பிரதேச சபைத் தலைவர் ஜகத் ஜயசிங்க, சப்ரகமுவ மாகாண ஆயர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் டலஸ் பதிரகே உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்




# கீவ் புறநகரிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ரஷ்யப் படை புச்சா நகரில் வெறியாட்டம்

## அப்பாவிகள் 410 பேர் சுட்டுக் கொலை; தெருக்களில் சிதறிக் கிடக்கும் சடலங்கள்

## ஐ.நா. உட்பட உலக நாடுகள் கண்டனம்

ரஷ்யாவின் கோரத் தாக்குதலால் உக்ரைனின் புச்சா (Bucha) நகரில் வீதிகள்தோறும் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்களின் சடலங்கள் சிதறிக் கிடக்கும் கோரக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்களிலிருந்து ரஷ்யப் படைகள் முழுமையாக விரட்டியடிக்கப்பட்டிருக்கும் நிலையில், உக்ரைனின் பதிலடி தாக்குதலை சமாளிக்க முடியாமல் ரஷ்யா அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தலைநகர் கீவ் மற்றும் சேர்னிவ் பகுதிகளிலிருந்து வெளியேறிய ரஷ்ய வீரர்கள், தலைநகர் கீவ்வை ஓட்டிய புச்சா நகரில் அப்பாவி மக்கள் சுமார் 410 பேரை தலையில் குறிவைத்து படுகொலை செய்து புதைகுழிகளில் வீசிவிட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் பல சடலங்கள் முதுகுப் பின்னால் கைகள் கட்டப்பட்டு, வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டிருந்துள்ளன. கொடூரமாக மக்களைக் கொன்ற ரஷ்யாவுக்கு ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

கிவ், கார்கிவ் மற்றும் சேர்னிகிவ் ஆகிய நகரங்களில் ரஷ்யப் படையினர் பாலியல் வன்முறை, கொலை உள்ளிட்ட பொதுமக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைச் செய்திருக்கலாம் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உக்ரைன் தலைநகர் கிவ்வில் பொதுமக்களில் 410 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில், ரஷ்யா போர்க்குற்றத்தில் ஈடுபடுவதாக மேற்கத்தேய நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்தது. இந்த மோதல் இன்று 41 நாட்களாக தொடர்கிறது. இந்தத் தாக்குதலில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் சின்னாப்பின்னமாக்கப்பட்டுள்ளன. எனினும், தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ் போன்ற நகரங்களை கைப்பற்ற முடியாமல் ரஷ்யா திண்டாடிவருகிறது.

உக்ரைனில் ரஷ்யப் படையெடுப்பு தொடங்கியதிலிருந்து இதுவரை 42 இலட்சம் பேர் வெளியேறி அண்டைநாடுகளின் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். அத்தோடு சுமார் 65 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் என ஐ.நா. அகதிகள் முகமை தெரிவித்துள்ளது.

உக்ரைன் படைகளின் கடும் பதிலடி தாக்குதலால் கடந்த ஒரு வாரத்தில் கைப்பற்றிய முக்கிய நகரங்களை ரஷ்யா பறிகொடுத்தது.

அமெரிக்கா, நேட்டோ உள்ளிட்ட உலக நாடுகள் ஆயுதம் வழங்கியதன் காரணமாக உக்ரைன் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. ரஷ்யாவிலுள்ள எண்ணெய்க் கிடங்கு மீது தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளனர். முக்கிய நகரங்களை கைப்பற்ற முடியாமல் திணறும் ரஷ்யா ஒரு குறிப்பிட்ட பகுதியை (கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ்) மட்டும் கைப்பற்றும் முனைப்பில் கவனம் செலுத்தி உக்ரைனை இரண்டாக பிரிக்க திட்டமிட்டு, தங்களது படைகளை டான்பாசில் குவித்து வருகிறது. இங்கு, கிளர்ச்சிப் படைகளின் ஆதரவுடன் கைப்பற்ற ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

வான்வழித் தாக்குதல் உக்ரைனின் அழகையே சாம்பலாக மாற்றிய ரஷ்யப் படைகள் மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. தாக்குதல் நின்ற இடத்தில் திரும்பும் மக்களை கண்ணிவெடி தாக்குதல் மூலம் கொல்ல திட்டமிட்டு ஆங்காங்கே புதைத்து வைத்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். இதனால், பொதுமக்கள் ஒவ்வொரு அடியும் கவனமாக எடுத்து வைக்கின்றனர்.

இந்நிலையில், தலைநகர் கீவ்வின் வடக்கேயுள்ள பகுதியை மீட்டெடுக்க உக்ரேனிய படைகள் எச்சரிக்கையுடன் நகர்ந்தன. உக்ரைன் படைகள் புச்சா நகரை கைப்பற்றின.

ரஷ்யப் படைகளிடமிருந்து பிரதேசத்தை மீட்டெடுத்த பின்னர் ஹோஸ்டோமலிலுள்ள அன்டோனோவ் விமான நிலையத்தின் நுழைவாயிலில் தங்களது படைகளை உக்ரைன் நிறுத்தியது. இந்நிலையில், தலைநகர் கீவ் மற்றும் சேர்னிவ் சுற்றியுள்ள பகுதிகளை உக்ரைன் இராணுவம் முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது.

இதனால், அங்கிருந்து வெளியேறிய ரஷ்ய வீரர்கள், அப்பாவி மக்கள் 300 பேரை படுகொலை செய்து புதைகுழிகளில் வீசிவிட்டு சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தலைநகருக்கு வடமேற்கே 37 கிலோமீற்றர் தொலைவிலுள்ள புச்சா நகரிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக, அந்த நகர பொதுமக்களைத் துன்புறுத்தி படுகொலை செய்ததற்கான ஆதாரங்களை உக்ரைன் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

இதுவரை வீதிகளில், புதைகுழியில் அரைகுறையாகப் புதைக்கப்பட்டிருந்த 410 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த சடலங்களின் உடல்களில் அதிக காயங்கள் எதுவும் இல்லாததால், உயிரிழந்தவர்கள் அனைவரும் மிக







அருகிலிருந்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் நேரில் பார்வையிட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து உக்ரைன் அரச வழக்குரைஞர் இரினா வெனெடிக்டோவா தெரிவிக்கையில்,

''புச்சா, இர்பின் மற்றும் ஹோஸ்டோமல் நகரங்களிலிருந்து ரஷ்யப் படையினர் வெளியேறியதும் அந்த நகருக்குள் நாங்கள் நுழைந்ததும் அதிர்ச்சிகள் காத்திருந்தது. அங்கு புதைகுழியில் அரைகுறையாகப் புதைக்கப்பட்டவாறும், சில சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும், துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்டவாறு வீதிகளில் கிடந்த 410 உடல்களை கண்டு அதிர்ச்சியடைந்தோம். மேலும், சிலர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டிருப்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

இதுவரை 140 உடல்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. ஆனால், கீவ் நகரிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு முடிந்தவரை தடயவியல் நிபுணர்களை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்'' என்றார்.

மேலும், ரஷ்யப் படையினரிடமிருந்து மீட்கப்படும் பகுதிகளிலிருந்து அவர்கள் நிகழ்த்திய கொடூரச் செயல்களுக்கான ஆதாரங்களைத் திரட்டி வருவதாகவும், குற்றங்களின் விவரங்களை சாட்சியங்களுடன் கண்டறிய அதிக காலம் தேவைப்படும் என்றும், "மக்கள் உடல் ரீதியாக பேச முடியாத அளவுக்கு மன அழுத்தத்திலுள்ளனர்." இவற்றையெல்லாம் ரஷ்யாவுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையின்போது பயன்படுத்தவிருப்பதாகவும் தெரிவித்தார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜனாதிபதி வொலோடிமீர் ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில்,

"நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சித்திரவதை செய்யப்பட்டும், தூக்கிலிடப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். அந்த சடலங்களெல்லாம் வீதிகளிலும். சுரங்கங்கள் வெட்டப்பட்ட பகுதிகளிலும் கிடக்கின்றன. இறந்தவர்களின் உடல்கள் கூட வெட்டப்பட்டுள்ளன'' - என்றார்.

அத்தோடு, ரஷ்யா மீது மேற்கத்தேய நாடுகள் புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்கும் என்பதில் தெளிவாக இருப்பதாகவும், ஆனால், அது போதாது என்றும் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



புச்சா நகரில் தங்கள் படைகள் பொதுமக்களைக் கொன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. ரஷ்யப் படைகளின் வன்முறையால் எந்த பொதுமக்களும் பாதிக்கப்படவில்லை என்றும், மேற்கத்தேய நாடுகளிடையே ஆத்திரங்களை மூட்டுவதற்காக கீவ் குற்றஞ்சாட்டுவதாகவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தமது ட்விட்டரில் பக்கத்தில்,

''உக்ரைன் தலைநகர் கீவ்வுக்கு அருகிலுள்ள புச்சா நகரில் ரஷ்யப் படைகள் அப்பகுதியிலிருந்து அவசரமாக பின்வாங்கிய பின்னர், பொதுமக்கள் கொல்லப்பட்டது 'வேண்டுமென்றே செய்யப்பட்ட படுகொலை'. இப்போது புதிய பேரழிவு தரும் G7 தடைகளை ரஷ்யா மீது போட வேண்டும் என்று நான் கோருகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ரஷ்யா மீதான எதிர்த் தாக்குதலை தீவிரப்படுத்த ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள், விமானங்கள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை வழங்கவேண்டும் என்று மேற்குலக நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

**அதிர்ச்சியடைந்தேன்**

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் சார்லஸ் மைக்கேல் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், ''உக்ரைனில் ரஷ்யப் படைகள்



நடத்திய அட்டூழியங்களை கண்டித்து ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். புச்சாவில் ரஷ்ய இராணுவம் செய்த அட்டூழியங்களின் பேய் படங்களால் அதிர்ச்சியடைந்தேன். சர்வதேச நீதிமன்றங்களில் வழக்கு தொடர தேவையான ஆதாரங்களை சேகரிப்பதில் உக்ரைன் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவுகிறது'' என்று தெரிவித்தார்.

**போர்க்குற்ற விசாரணை**

உக்ரேனிய நகரங்களான இர்பின் மற்றும் புச்சாவில் பயங்கரமான செயல்களுக்கு ஆதாரங்கள் குவிந்துள்ளதால், பொதுமக்கள் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் போர்க் குற்றங்களாக விசாரிக்கப்பட வேண்டும் என்று பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் லிஸ் ட்ரஸ் தெரிவித்துார்.

**டாங்கிகள், போர் விமானங்களை ஒப்படைக்கும் ரஷ்ய வீரர்களுக்கு வெகுமதி**

தங்கள் நாட்டு இராணுவ டாங்கிகள் மற்றும் ஜெட் விமானங்களை ஒப்படைக்கும் ரஷ்ய வீரர்களுக்கு 75 இலட்ச ரூபாமுதல் ஏழரை கோடி ரூபாவரை வெகுமதி வழங்கப்படும் என உக்ரைன் அரசு அறிவித்துள்ளது.

உக்ரைன் இராணுவத்திடம் சரணடையும் ரஷ்ய வீரர்கள் தங்கள் நிதி நிலைமையை மேம்படுத்திக்கொள்ள விரும்பினால் அவர்களுக்கு வெகுமதி வழங்க உக்ரைன் அரசு தயாராக உள்ளதாக துணை சபாநாயகர் கோர்னியன்கோ (Kornienko) நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி போர்க்கப்பல் அல்லது போர் விமானத்துக்கு ஏழரை கோடி ரூபாவும், ஹெலிகொப்டருக்கு மூன்றே முக்கால் கோடி ரூபாவும், இராணுவ டாங்கிக்கு 75 இலட்சம் ரூபாவும் வெகுமதி வழங்கப்படும் எனவும் இராணுவ கவச வாகனத்துக்கு சுமார் 38 இலட்சம் ரூபாவும், இராணுவ ட்ரெக்கிற்கு ஏழரை இலட்சம் ரூபாவும் வெகுமதி வழங்கப்படும் என நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

**அனைவரும் தங்களால் இயன்றவற்றை உக்ரைனுக்கு உதவி செய்யுங்கள்**

சர்வதேச அளவில் இசைத்துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு அமெரிக்காவின் லொஸ் வேகாஸில் ஞாயிற்றுக்கிழமை கிராமி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இந்த விருது விழா நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இசை ஜாம்பவான்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின்போது ஒளிபரப்பப்பட்ட வீடியோவில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி ''இசைக்கு நேர் மாறானது, போரால் சிதிலமடைந்திருக்கும் நகரங்களும், உயிரிழந்த பொதுமக்களின் அமைதியும்தான். அந்த அமைதியை உங்கள் இசையால் நிரப்புங்கள், இன்றே நிரப்புங்கள், அதில் எங்கள் கதையை கூறுங்கள். அனைவரும் தங்களால் இயன்ற வகையில் உக்ரைனுக்கு உதவி செய்யுங்கள்'' என உருக்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.













# இருபதுக்கு 20 அரங்கில் புதிய மைல்கல்லை எட்டிய தோனி

**பஞ்சாப் கிங்ஸ் அணியுடனான போட்டியில் நேற்று முன்தினம் விளையாடியதன் மூலம் அதிக இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடிய இந்திய வீரர்கள் பட்டியலில் எம்.எஸ். டோனி இரண்டாம் இடம்பிடித்தார்.**

**குறித்த போட்டியானது, எம்.எஸ். தோனிக்கு 350ஆவது இருபதுக்கு 20 போட்டியாகும். இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா 372 போட்டிகளில் விளையாடி, இந்த பட்டியலில் முதல் இடத்தில் நீடிக்கிறார். 336 போட்டிகளில் பங்கேற்ற சுரேஷ் ரெய்னா இந்த பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ளார்.**

# வட – கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி இடைநிறுத்தம்



(நிந்தவூர் நிருபர்)

வட மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க கராத்தே போட்டி கடந்த சனிக்கிழமை திருகோணமலை மெக்கெய்சர் உள்ளக அரங்கில் இடம்பெற்ற நிலையில், நாட்டில் திடீரென அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு நிலைமையால் ஏனைய போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் பிற்போடப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டுக்கு பின்பு முதன் முறையாக நடைபெற்ற இந்த போட்டியில் வடக்கிலிருந்து ஏராளமான வீரர்கள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியமை சிறப்பம்சமாகும். இந்தப் போட்டியை ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாண தலைவர் ஏ.ஆர். இக்பால் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியில் 90 வீதமான போட்டி நிகழ்ச்சிகள் நிறைவடைந்த நிலையில் நாட்டில் திடீரென அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு நிலைமையால் ஏனைய போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் பிற்போடப்பட்டுள்ளன.

# சம்பியனான சம்மாந்துறை எஸ்.எஸ்.சி



(ஏ. அகீல் சிஹாப்)

சம்மாந்துறை ஐ.என்.ஆர். மோட்டர்ஸ் நிறுவனத்தின் 12ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சம்மாந்துறை கவுண்டி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரில் சம்மாந்துறை எஸ்.எஸ்.சி அணி சம்பியனானது.

அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட குறித்த தொடரில் 14 அணிகள் பங்கேற்றன. கடந்த சனிக்கிழமை சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சம்மாந்துறை நியூ சன் அணியும் எஸ்.எஸ்.சி அணியும் எதிர்த்தாடின. இதில் எஸ்.எஸ்.சி அணி வெற்றிபெற்று சம்பியனானது.

வெற்றிபெற்ற அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன் ரூ.10 ஆயிரம் பணப்பரிசும் இறுதிப்போட்டியில் தோல்வியடைந்த அணிக்கு கிண்ணத்துடன் ரூ.5 ஆயிரம் பணப்பரிசும் ஐ.என்.ஆர் மோட்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் நூர் முஹம்மட் இனால் வழங்கி வைக்கப்பட்டது.

# நடப்பு சம்பியனுக்கு தொடரும் சோகம்




CSK vs PBKS
போட்டியை காண

**022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் நடப்பு சம்பியனான ரவீந்திர ஜடேஜா தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வரிசையாக 3 தோல்விகளை சந்தித்து பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.**

**நடப்பு ஐ.பி.எல். தொடரின் 11ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, லியம் லிவிங்ஸ்டனின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 180 ரன்கள் எடுத்தது.**

**இதனை தொடர்ந்து 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி தொடக்கத்திலே விக்கெட்டுகளை பறிகொடுத் தது.**

**ருதுராஜ், உத்தப்பா, மொயின் அலி, ஜடேஜா, ராயுடு ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். சிவம் துபே மட்டும் அதிரடியாக விளையாடி அரைசதம் அடித்து 30 பந்துகளில் 57 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.**

**பின்னர் வந்த வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் சென்னை அணி 18 ஓவர்கள் முடிவில் 10 விக்கெட்டுகளை இழந்து 126 ரன்களுக்கு சுருண்டது. இதனால் 54 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.**

# பெற்றோருக்காக வீடு வாங்குவதே எனது இலட்சியம் – வறுமைக்கு மத்தியில் சாதிக்கும் திலக் வர்மா



ஐ.பி.எல் போட்டியில் கிடைக்கும் பணத்தை வைத்து எனது பெற்றோருக்காக வீடு வாங்குவதே எனது இலட்சியம் என மும்பை இந்தியன்ஸ் அணியின் இளம் வீரர் திலக் வர்மா கூறியுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் இளம் வீரரான திலக் வர்மாவின் ஆட்டம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. முதல் போட்டியில் 22 ரன்களும், 2ஆவது போட்டியில் 5 சிக்சர்களுடன் 61 ரன்கள் எடுத்திருந்தார். ஐ.பி.எல் ஏலத்தின்போது அவரை மும்பை இந்தியன்ஸ் அணி 1.7 கோடிக்கு வாங்கியது. ஏலத்திற்கு ஏற்றது போல அவரது ஆட்டம் சிறப்பானதாக இருந்தது. இந்நிலையில் அவர் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும் சொந்தமாக வீடு இல்லை என்றும் திலக் வர்மா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்தவன். எனது தந்தையின் குறைந்த சம்பளத்தில் தான் எனது கிரிக்கெட் செலவையும் சகோதரனின் படிப்பு செலவையும் பார்த்துக் கொண்டார். எங்களுக்கு சொந்தமாக வீடு இல்லை. இந்த ஐ.பி.எல். மூலம் சம்பாதித்து எனது பெற்றோருக்காக வீடு வாங்குவதே எனது குறிக்கோளாக கொண்டுள்ளேன். ஐ.பி.எல் ஏலத்தின்போது எனது குடும்பத்தினரும் மற்றும் பயிற்சியாளரும் உணர்ச்சிவசப்பட்டனர்.

ஏலம் நடந்து கொண்டிருக்கும்போது எனது பயிற்சியாளர் வீடியோ அழைப்பில் இருந்தார். நான் அதிகமாக ஏலம் போகும் போது பயிற்சியாளர் கண்ணீர் சிந்தினார். உடனே எனது பெற்றோருக்கு விபரத்தை கூறியபோது அவர்களும் அழுதனர். எனது தாய் பேச வார்த்தைகள் இல்லை என என்னிடம் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் என திலக் வர்மா கூறினார்.

# மியாமி ஓபனில் சம்பியனான முதல்நிலை வீராங்கனை ஸ்வியாடெக்



மியாமி ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் போலந்தின் இளம் வீராங்கனை ஐகா ஸ்வியாடெக் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். டென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங்கனையான ஸ்வியாடெக்குடன் அண்மையில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஜப்பானின் நவோமி ஒசாகா மோதினார். இதில் 6-4, 6-0 என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் ஸ்வியாடெக்.

4 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான ஒசாகா எளிதில் வெல்வார் எனக்கருதப்பட்ட நிலையில், 79 நிமிடங்கள் நீடித்த போட்டியில் இலகுவாக சம்பியனானார் ஸ்வியாடெக். 20 வயதான ஸ்வியாடெக் கடந்த வாரம் ஆஷ்லி பார்டி ஓய்வு பெற்ற நிலையில் உலகின் நம்பர் வன் வீராங்கனை அந்தஸ்தை அடைந்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# ஸ்டார்க் – ஹீலி ஜோடியை வாழ்த்திய ஐ.சி.சி




12ஆவது ஐ.சி.சி மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி 7ஆவது முறையாக அவுஸ்திரேலிய மகளிர் அணி சம்பியன் பட்டம் வென்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சதமடித்த ஆஸி. வீராங்கனை அலீசா ஹீலி, ஆஸி. கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் மிட்செல் ஸ்டார்க்கின் மனைவி ஆவார். இந்த போட்டியை காண மிட்செல் ஸ்டார்க் மைதானத்திற்கு வருகை தந்திருந்தார்.

போட்டி முடிந்த பிறகு மிட்செல் ஸ்டார்க், அலீசா ஹீலி ஆகியோர் உலகக்கிண்ணத்துடன் புகைப்படம் எடுத்து கொண்டனர்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது, 2015ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஆடவர் அணி உலகக்கிண்ணத்தை வென்ற போது அந்த உலகக்கிண்ணத்துடன் மிட்செல் ஸ்டார்க், அலீசா ஹீலி இருக்கும் புகைப் படத்தையும் நேற்று முன்தினம் இருவரும் எடுத்துக்கொண்ட புகைப்படத்தையும் பகிர்ந்து வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

# உலகக்கிண்ண அதிகாரபூர்வ முதல் பாடல் வெளியீடு




கட்டாரில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்ட தொடரின் அதிகாரபூர்வ முதல் பாடல் கடந்த வாரம் டோஹாவில் வெளியிடப்பட்டது.

அமெரிக்க நட்சத்திரங்களான டிரினிடாட் கார்டோனா, டேவிட்டோ, கட்டார் பாடகி ஆயிஷா ஆகியோர் இந்த ஆண்டுக்கான உலகக்கிண்ண அதிகாரபூர்வ ஒலிப்பதிவின் முதல் பாடலைப் பாடியுள்ளனர். ஹய்யா ஹய்யா (பெட்டர் டுகெதர்) இந்தப் பாடல் உதைபந்தாட்ட ரசிகர்களைக் கவரும் வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளின் குரல்களை ஒன்றிணைப்பதன் மூலம் இசை - உதைபந்தாட்டம் - உலகை எவ்வாறு இணைக்க முடியும் என்பதை இந்தப் பாடல் குறிக்கிறது என்று பீபாவின் தலைமை வர்த்தக அதிகாரி கே மடாதி கூறினார்.

அரிசோனாவைச் சேர்ந்த பொப் பாடகர் டிரினிடாட் கார்டோனா, 2017ஆம் ஆண்டில் வைரல் ஹிட் ஜெனிஃபர் மூலம் பிரபல்யமானவர். அட்லாண்டாவில் பிறந்த டேவிடோ - ஃபால், இஃப் உள்ளிட்ட பல வெற்றிப் பாடல்களைப் படியுள்ளார். அதில் அவர் பல விருதுகளை வென்றுள்ளார்.

ஆயிஷா கட்டாரின் மிகவும் பிரபலமான பாடகர்களில் ஒருவர். நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, டோஹா ஃபெஸ்டிவல் சிட்டியின் பிரமாண்ட திறப்புவிழா உட்பட உலகெங்கிலும் தலைசிறந்த நிகழ்ச்சிகளில் பாடியுள்ளார், உருவாக்குகிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7